750

R. M. 1803. OCTOBER 1926 Vol. IV—No. 3

8

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3-NOV 1926
MADRAS

லக்ஷ்மி

சொந்தக்காரர்கள் :
கே. எஸ். முத்தையா & கோ., சென்னை.

வருட சந்தா உள்நாடு ரூ. 2. வெளிநாடு ரூ. 2-8-0.

பெயர்பெற்ற

"அன்ஸோனியா"

ஜோபி கடிகாரங்கள்

பார்வைக்கு
அழகான
மத்திய சயிஸ்.



வெள்ளியை
யொத்த
பிரகாசமான
பாலிஷ்.

அன்ஸோனியா கம்பெனியின் கடிகாரங்களைப்பற்றி அதிகம் விவரித்துக் கூறவேண்டிய தில்லை. மேல்படி கம்பெனியாரால் செய்யப்பட்ட புது மாதிரியான "Ansonia" லிவர் ஜோபி கடியாரங்கள் நம்மிடம் விற்பனைக்குத் தயாராக இருக்கின்றன. அதிகம் பெரிதல்லாத, பார்வைக்கு அழகான சயிஸ், பளிங்கியை யொத்த பளபளப்பான பாலிஷ்.

சொற்ப கடிகாரங்களே வந்திருப்பதால் முந்திக் கொள்வது நலம்.

மூன்று வருஷத்திற்கு உத்திரவாதம்

விலை ரூ. 6—12—0 தான்

K. S. Muthiah & Co.

Export Dept

Post Box 99 :: :: MADRAS

பச்சை மோதிரத்தின் மர்மம்

காதல் ததும்பும் இனிய அற்புதமான தமிழ் நாவல். படிப்பவர்களுக்கு மிகுந்த சந்தோஷத்தையும் ஆனந்தத்தையும் அளிக்கக் கூடியது. புதிதாக வெளியாயிருக்கிறது. சுத்தப் பதிப்பு.

விலை ரூ. 1.

மணிவடக் களவு

பட்டப் பகலில் போலீசார் முன்னே ஒரு இரத்தின மாலையைத் திருடி மறைந்த ஒரு சுந்தர மாதின் தந்திரச் செயல்களை விளக்கும் ஓர் அற்புதமான துப்பறியும் கதை.

விலை அணா 4.

பங்கஜம்

இது ஒரு அழகிய சிறு கதை. தெள்ளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டது. வயது முதிர்ந்தவர்கள் இளம் பெண்களை விவாகம் செய்வதால் ஏற்படும் இடுக்கண்களை விரிவதுடன், எடுத்துக் கூறுவது. விலை ஏதகம் ஒன்

ார காண்டம்

குயில்மொழி

ன்டம், ஜன்ம

ஒரு சிறுமியைப் பற்றிய சிறப்பான கதை. தமிழ் ஹைகர காண் சிறுவர் சிறுமிகளுக்கு இதைவிட மன வெழுச்சியைக் கொடுக்கக் கூடிய கதை இல்லவே இல்லை.

விலை அணா 2.

எனது காங்கிரஸ் யாத்திரை

இந்தியாவின் சுதந்திரத்தை விரும்புவோரெல்லாம் அவசியம் படித்தறிய வேண்டிய நூல். தற்காலத் தேசாபிமானிகளின் தன்மையை வெட்டனத் திறந்து காட்டுவது. அழகிய நடை.

விலை அணா 3.

லக்ஷ்மி தாலாட்டுக் கோவை

நான்கு விதத் தாலாட்டுகள் அடங்கியது. தமிழ் நாட்டுத் தாய்மார்களுக்கு ஏற்றது.

விலை அணா 3.

மனோகரி

இது பெயருக் கேற்பவே ஒரு மனோஹரமான நாடகம். கற்பின் மகிமை, புருஷ தம்பதிகளின் சுக வாழ்வின் ரகசியங்கள், இல்லற தருமங்கள் முதலியன இதில் தெளிவுற விளக்கப்பட்டுள்ளன.

விலை அணா 8.

லக்ஷ்மி புஸ்தக சாலை,

தபால் பெட்டி 99, மதராஸ்.

Lakshmi Book Depot.

பழமொழித் திரட்டு

பண்டைக்காலந் தொட்டே தமிழ்நாட்டில் வழங்கும் பழமொழிகளில், சிறந்தவைகளை ஒன்றாகத் திரட்டி அச்சிடப் பெற்றது. விலை அணா 3.

நடராஜப் பத்து

நடராஜப் பத்து, நடராஜர் பதிகப்பஞ்சகம், தில்லை நடராஜர் பதிகம், இம் மூன்றும் ஒரே புத்தகத்தில் சந்தி பிரித்து கிளேஸ் கடிதத்தில் திருத்த முற அச்சிடப்பட்டது.

விலை அணா 2.

கந்தரலங்காரம்

இதில் கந்தரலங்காரம், கந்தர் சஷ்டி கவசம், சத்ரு சங்கார வேற்பதிகம், அகத்தியப் பஞ்சகம் முதலியவைகள் அடங்கி க்கிறது. கிளேஸ் கடிதம். விலை அணா 4.

வான் லொடபடசிங் பகதூர்

என்ற

வேடிக்கையான பெயர் கொண்ட ஒரு புதிய நாவல் வெளியாகி இருக்கிறது. நாவலின் பெயரே இதில் வேடிக்கைகளும், ஹாசியங்களும், தந்திரங்களும் ஏராளமாக நிறைந்திருப்பதற்கு அறி குறியாகும். இது ஸ்ரீமான் வடுவூர் கே. துரைஸாமி ஐயங்கார் அவர்களால் இப்போதே புதிதாய்த் தயாரிக்கப்பட்ட மகா அருமையான நாவல். பூலோக விந்தை என்ற பெயருடைய சமஸ்தானத்தில், மகாராஜா, திவான், ஜனங்கள் ஆகிய எல்லோரையும் அவர் சுமார் 10 வருஷ காலம் வரையில் ஏமாற்றிக் கொள்ளை யடிப்பது விந்தையிலும் விந்தை. இது தேசீய வாதிகள் அவசியம் படிக்க வேண்டிய புஸ்தகம். இது படிக்கப் படிக்க ஆநந்த முண்டாக்கும் விநோதக் களஞ்சியம். கதை ஒரே பாகத்தில் முடிகிறது; உயர்ந்த பேதர் வேயிட் காகிதத்தில், அழகான ஆப்டோன் படத்துடன் தயாரா யிருக்கிறது. விலை அணா **0 12 0**

கலாசுந்தரி அல்லது அந்தரங்க அதிசயங்கள்.

இஃது நாகை வி. தண்டபாணி பிள்ளை அவர்களால் எழுதப்பட்டது. மீன் வர்ணனை, ரயில் சம்பாஷணை, சித்திரக் குள்ளனின் சில்மஷம், பாட்டுக்கச்சேரி முதலியவைகள் அடங்கியுள. விலை அணா 12.

POST BOX No. 99.
188, Govindappa Naick St., **MADRAS.**

லக்ஷ்மி புஸ்தக சாலை.

மாதர் நீதி.

இதில் நமது தேசத்துப் பெண்கள் கணவருடன் கூடி வாழ்வதற்குரிய அநேக நீதிகளை எடுத்துக் காட்டுவது: இப் புஸ்தகம், (1) இளமைப் பருவம் (2) கணவரோடு கூடி வாழும் பருவம் (3) முதுமைப் பருவம் என மூன்று பாகங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. பெண்களுக்கு மிகவும் உபயோக மானது. விலை ரூ. 1 0 0.

ஆனந்த ராமாயணம்.

வால்மீகி மகரிஷியால் இயற்றப்பட்டது. இப் புத்தகத்தில் ஸ்ரீராம லக்ஷ்மண பரத சத்ருக்னர்களுடைய ஜனனமும், வளர்ப்பும், சீதா தேவியி னுடைய ஜனனமும், அத் தேவிக்குப் பல பெயர் வந்ததற்குக் காரணமும் விளக்கி யிருப்பதுடன், படிப்பதற்கு வெகு இனிமையா யிருக்கும். இப் புத்தகம் ஒன்பது காண்டங்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது:—ஸார காண்டம் யாத்திரை காண்டம், யாக காண்டம், விலாக காண்டம், ஜன்ம காண்டம், விவாக காண்டம், ராஜ்ய காண்டம், மனோகர காண்டம், பூர்ண காண்டம். இது உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டு ஆர்ட் பேப்பரில் 13 ஆப்டோன் படத்துடன் விலை ரூ. 6 0 0.

சத்தியார்த்த பிரகாசம்.

ஆரிய சமாஜத்தை ஆரம்பித்த ஸ்ரீ தயாநந்த சுவாமிகளால் அருளப்பட்டது. தேக சம்பந்தம் செய்ய வேண்டிய வழியிலிருந்து தெய்வத்தைக் காணும் வழி வரையி லிருக்கிறது. இதை ஒரு தடவை படித்தவன் பெரும் பண்டிதனுவான். பல வருடங்களாகப் பாடுபட்டுத் தமிழ் படுத்தப்பட் டிருக்கிறது. ஸ்ரீமான் எம். ஆர். ஜம்புநாதய்யரால் மொழி பெயர்க்கப்பட்டது. எல்லோரும் புகழும் இந் நூலைத் தமிழர் எல்லோரும் படிக்க வேண்டியது அவசியம். விலை ரூ. 2 2 0

வர்த்தக யுக்தி

வர்த்தகத்தைப் பற்றிய இந் நூல் எல்லா வியாபாரிகளுக்கும் இன்றியமையாத பொக்கிஷம். வர்த்தகம் செய்யும் முறைகளும் அதற்கு அனுசரணையான காரணங்களும் செவ்வனே ஸ்ரீமான் எம். ஏ. நெல்லையப்ப முதலியா ரவர்களால் எழுதப்பட் டிருக்கிறது. விலை அணா 12.

தபால் பெட்டி, 99
188, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, **மதராஸ்.**

Lakshmi Book Depot.

கோமளா அல்லது கைலாசய்யரின் கெடுமதி.

இந்நாவலின் முக்கியமான கதா நாயகன் விஸ்வநாதன் விசாலாக்ஷி யினுடைய காதல் சந்திப்பும், கோமளா என்ற மாதின் கற்புக் காத்தலும், கல்யாணி, மாயாண்டித்தேவன், பார்த்தசாரதி அய்யர், கைலாஸய்யர் இவர்களுடைய கெடுமதியும், புஜங்கராவினுடைய துப்பறியும் சாமர்த்தியமும் படிக்கப் படிக்க தெவிட்டாத இன்ப மளிக்கும். இதுவரையில் இதைப் போன்ற துப்பறியும் நாவல் வெளிவர வில்லை என்பது திண்ணம். விலை அணா 12.

சரீர மர்ம சாஸ்திரம்

(ஒரு மானிட இன்ப நூல். 5 பதிப்பு.)

தமிழ் பாஷையில் இவ்வளவு பூர்ணமான இரகசிய சாஸ்திரம் இதுவரையில் எவராலும் பகிரங்கமாய் வெளியிடப்பட வில்லை. இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும், அவர்களது அவயவங்களின் அமைப்பும், அவைகளின் நேர்மையான உபயோகங்களும் ரதி மன்மத சிருங்கார ரஹசியங்களும், ஆண் பெண் சிசு உற்பத்தி விபரமும், ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டாகும் வியாதிகளும், அதை போக்கத் தக்க சிகிச்சைகளும், மஹரிஷிகளால் மர்மமாக ஆதியில் எழுதிய இல்லற இன்பங்களும், விவாக மானவர்களுக்கும், இனி மேல் விவாகஞ் செய்துக்கொள்ளும் சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாத நூல். 64 சித்திரப் படங்களுடன் கூடியது. விலை ரூ. 1 0 0

சிவாஜி மகாராஜா

இவருடைய சரித்திரத்தை ஒவ்வொருவரும் கற்றுணர்தல் அவசியம். தற்காலம் இந்தியாவின் சுயராஜ்யத்திற்கு பாடுபடுபவர்களுக்கு மிகவும் இன்றியமை யாதது. தேசாபிமானத்தையும், ஜாதீய மரியாதையும் தன் மதிப்பையும், தெய்வ பக்தியையும் ஒருங்கே புகட்டக் கூடியது. விலை ரூ. 2 8

ஆழ்வார்கள் சரித்திரம்

இதில் ஆழ்வார்களின் சரித்திரங்களையும், கால நிர்ணயங்களையும் சவிஸ்தாரமாகக் குறிப்பிட்டிருக்கிறது. விலை ரூ. 1 8

தலையணை மந்திரோபதேசம்

இது ஒரு குடும்பத்தின் இரக்சிய நூல். யாவரும் அவசியம் கற்றுணர வேண்டியது. விலை ரூ. 1 0

POST BOX No. 99.
188, Govindappa Naick St., MADRAS.

லக்ஷ்மி புஸ்தகசாலை.

இரத்தின மாளிகை

கஷ்டப்படாமல் தடபுடல் செய்து மாய வஞ்சகம் செய்யும் துர்க் குணமானது சற்று நீடித் திருந்தாலும் முடிவில் அழிவையே உண்டாக்கும் என்னும் கருத்தை வெளியிட்டு, நற்குணமும், சத்தியமுமே மேன்மை தரக்கூடிய தென்பதை விரிவாகக் காட்டக் கூடியது. விலை அணு 0 12

பத்மாவதி சரித்திரம்

10 அழகிய படங்களுடனும் அலங்காரமாய் அநேக பழமொழிகளை யுடையது. இனிய தமிழ் நடை. விலை ரூ. 2 0

வியாபார தந்திரம்

வர்த்தக விஷயமான விஷயங்களை விரிவாக எடுத்துக் காட்டுவது. வியாபாரிகளுக்கு மிகவும் உபயோகத்தைக் கொடுக்கக் கூடியது. விலை ரூ. 1 8

மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்

இது காந்தியின் வரலாற்றிலுள்ள நுட்பங்களை மனித வாழ்க்கையோ டியைந்து நிற்கும் முறையைக் குறிப்பது. தவிர சன்மார்க்கத் துறைகள் பல இந்நூலின்கண் காணலாம்.
விலை ரூ. 2 0

மணவாழ்க்கையின் மர்மங்கள்

இது கொக்கோகக் கோலம் என்னும் நூலின் விரி நூலாகும். இதில் ஒவ்வொருவரும் அநுபவிக்க வேண்டிய இன்ப சுகம் பூரணமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அநேக படங்களுடன் கூடியது. விலை ரூ. 2 4

மதிமோச விளக்கம்

தென்னிந்தியாவில் நடை பெறும், சோதிடர் சூழ்ச்சி பூசாரிப்புரட்டு, வைத்தியர் மோசம், வக்கீல் அலங்கார சூழ்ச்சி மோசங்கள் முதலியவைகளை விரிவாக எடுத்துக் காட்டுவது.
விலை ரூ. 1 0

தபால் பெட்டி, 99
188, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, **மதராஸ்.**

Lakshmi Book Depot.

கண்ணகியின் சாபம் ...	0	8	0
கொழுத்த சிரிப்பு ...	0	8	0
திருத்தணிகை சந்நிதி முறை ...	0	8	0
ஜகன்மோகனன் ...	0	8	0
ஸத் வைத்திய ஜீவனம் ...	0	8	0
தாய்க்கிழவி தளுக்கு ...	0	8	0
அமரேசன் ...	0	8	0
வீரமாமுனிவர் நசகாண்ட வைத்தியம் 100 ...	0	8	0
புவனராணி ...	0	8	0
கற்பகவல்லி ...	0	8	0
இந்து தேகாப்பியாச சாதனம் ...	0	8	0
தனபதி ...	0	8	0
சுகுணசுந்தரி ...	0	8	0
ஜயலட்சுமி ...	0	8	0
உத்தரகுமாரன் ...	0	8	0
மறுச்சோழன் ...	0	8	0
தசமுகன் ...	0	8	0
நாயன்மார் சரித்திரம் ...	0	8	0
கலியுக புளுகன் ...	0	8	0
உலோகாதிசய விளக்கம் ...	0	8	0
மதிசூரி ...	0	8	0
சாவித்திரி ...	0	8	0
பழமொழி நீதிக் கதைகள் ...	0	8	0
லக்ஷ்மி ...	0	8	0
ஜீவகாந்தாமணி ...	0	8	0
பதிவிரதைகள் சரித்திரம் ...	0	8	0
அத்வைத சம்பாஷணைகள் ...	0	8	0
சுவாமி விவேகானந்தர் எழுதிய எதிரொலிகள் ...	0	8	0
சுவாமி விவேகானந்தர் அருளிய கிழக்கும்மேற்கும் ...	0	8	0
,, யார் வேதாந்த தத்துவமும் ...	0	8	0

குறிப்பு:—(இரண்டு மாதத்துக்கு மட்டும்) புதிதாகச் சேருகிற லக்ஷ்மி சந்தா நேயர்களுக்கும் பழய சந்தா நேயர்களுக்கும் இவைகளில் நான்கு புஸ்தகம் ஆர்டர் செய்பவர்களுக்கு மனோகரி என்ற அழகிய சிறந்த நாடகப் புஸ்தகம் ஒன்று இனாமாக அனுப்பப்படும். பழய சந்தா நேயர்கள் சந்தா நம்பர் குறித்தனுப்ப வேண்டும்.

POST BOX No. 99.
188, Govindappa Naick St., **MADRAS.**

லக்ஷ்மி புஸ்தக சாலை.

சுவாமியார் அருளிச்செய்த ராமாயண ரகசியம், மகாபாரத ரகசியம்	0	8	0
கந்தர் கலிவெண்பா மூலமும் உரையும் ...	0	8	0
பேயல்ல பெண்மணியே ...	0	8	0
காலவரிஷி ...	0	8	0
யயாதி ...	0	8	0
ஊர்வசி சாபம் ...	0	8	0
கோனேறி அரசகுமாரன் ...	0	8	0
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் ...	0	8	0
வேதாள உலகம் ...	0	8	0
ரஜபுத்திரவீரன் ...	0	8	0
பிரஹசனங்கள் ...	0	8	0
நற்குலதெய்வம் ...	0	8	0
சாரங்கதரன் ...	0	8	0
சிறுத்தொண்டர் ...	0	8	0
கீதமஞ்சரி ...	0	8	0
சந்திர ஹரி ...	0	8	0
மகாத்மா காந்தியின் இந்திய சுயராஜ்யம் ...	0	8	0
ஒத்துழையாமை ஏன் ...	0	8	0
மகாத்மா காந்தியின் சிறைச்சாலை அனுபவங்கள் ...	0	8	0
மகாத்மா காந்தியின் சரித்திரம் ...	0	8	0
ஸ்ரீ சங்கர விஜயம் ...	0	8	0
தமயந்தி ...	0	8	0
பரதன் உத்தம சகோதரன் ...	0	8	0
ஆத்திசூடி நீதிக் கதைகள் ...	0	8	0
விசித்திர தேவலோகக் கோர்ட்டு ...	0	8	0
தேகாரோக்கிய சாதனம் ...	0	8	0
இயற்கைப் பொருட் கதைகள் ...	0	8	0
கட்டுரைத் தொகுதி ...	0	8	0
ரமணி ...	0	8	0

குறிப்பு:—(இரண்டு மாதத்துக்கு மட்டும்) புதிதாக சேருகிற லக்ஷ்மி சந்தா நேயர்களுக்கும் பழய சந்தா நேயர்களுக்கும் இவைகளில் நான்கு புஸ்தகம் ஆர்டர் செய்பவர்களுக்கு மனோகரி என்ற அழகிய சிறந்த நாடகப் புஸ்தகம் ஒன்று இனாமாக அனுப்பப்படும். பழய சந்தா நேயர்கள் சந்தா நம்பர் குறித் தனுப்ப வேண்டும்.

தபால் பெட்டி, 99
188, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, **மதராஸ்.**

Lakshmi Book Depot.

கைத் தொழில் சாஸ்திரம்	...	1	0	0
பட்டினத்தார் புராண வசனமும் பாடலும்	...	1	0	0
சரீர மர்ம சாஸ்திரம்	...	1	0	0
வெங்கடேச பராக்கிரமம்	...	1	0	0
சௌந்தராபாய் அல்லது சதி கொலை	...	1	0	0
ஆநந்த கதா சாகரம்	...	1	0	0
தலைவாங்கி அபூர்வசிந்தாமணி	...	1	0	0
இரு கொலைகளின் இரகசியம்	...	1	0	0
டெயலரிங் அண்டு கட்டிங்	...	1	0	0
வேமன்ன பத்தியம்	...	1	0	0
அறப்பளீசுர சதகம் உரை	...	1	0	0
குமரேச சதகம் மூலம் உரை	...	1	0	0
பாய் பரமானந்தன்	...	1	0	0
பாணபுரத்து வீரன்	...	1	0	0
கிராம வாழ்க்கை	...	1	0	0
கிருஷ்ண விஜயம்	...	1	0	0
மாதர் நீதி	...	1	0	0
ஸ்வாமி விவேகானந்தர் கர்மயோகம்	...	1	0	0
தர்ம ஸ்தாபன சட்டம்	...	1	0	0
இன்கம் டாக்ஸ் சட்டம்	...	1	0	0
பாரத நாட்டின் நிலைமை	...	1	0	0
ஆரிய சரித்திரம்	...	1	0	0
கிருஷ்ணன் தூது	...	1	0	0
ஆனந்த மடம்	...	1	0	0
சூளாமணி வசனம்	...	1	0	0
சிலப்பதிகாரக் கதைகள்	...	1	0	0
வசந்த கோகிலம்	...	1	0	0
பிருதுவிராஜன்	...	1	0	0
கீசகன்	...	1	0	0

குறிப்பு :—(இரண்டு மாதத்துக்கு மட்டும்) புதிதாகச் சேருகிற லக்ஷ்மி சந்தா நேயர்களுக்கும், பழய சந்தா நேயர்களுக்கும், இவைகளில் நான்கு புஸ்தகம், ஆர்டர் செய்பவர்களுக்கு அழகிய துப்பறியும் நாவல் ஒரு ரூபாய் விலையுள்ள பர்சை மோதிரத்தின் மர்மம் என்ற புஸ்தகம் இனாமாக அனுப்பப்படும். பழய சந்தா நேயர்கள் சந்தா நம்பர் குறித்து அனுப்ப வேண்டும்.

POST BOX No. 99.
188, Govindappa Naick St., **MADRAS.**

சந்தா ஆர்டர் பாரம்

Date,....................192 .

மானேஜர்,

லக்ஷ்மி ஆபீஸ்,

மதராஸ்.

ஐயா,

தயை செய்து என்னை / எங்களை நமது லக்ஷ்மிக்குச் சந்தா நேயராக / நேயர்களாகச் சேர்த்துக்கொண்டு, இப்பொழுது நடந்து வரும் மலரின் முதல் இதழி லிருந்து ஸஞ்சிகைகளை அனுப்பிக் கொடுக்கவும். சந்தா ரூபாய் ம் மணியார்டர் செய்திருக்கிறேன். / க்கும் V. P. யில் தபால் செலவு உள்பட அனுப்பவும்.

அன்புள்ள,

(1).. (கையெழுத்து).

....

....

(2)..

.... கூடுமானல் நேயர்களின் கையெழுத்து.

....

....

(3)..

....

....

....

(4)..

....

....

....

குறிப்பு:—பெயர்களை மட்டும் இங்கிலீஷில் எழுதினல் மிகவும் நலமா யிருக்கும். தமிழில் எழுதினலும் சரியே.

குறிப்பு

லக்ஷ்மிக்கு நேயராகச் சேர விரும்புபவர்கள் முன் பக்கம் தங்கள் பெயர்களை எழுதி, இதைக் கிழித்துத் தனிக் கவரில் வைத்து, நமது ஆபீஸுக்கு அனுப்ப வேண்டும். இது அல்லாமல் நேயர்களின் சொந்த லெட்டர் அல்லது கார்டுகளிலும் எழுதி அனுப்பலாம். நேயர்கள் சந்தாவுக்கு V. P. யில் அனுப்பச் சொல்லுவதை விட பணம் மணியார்டர் செய்தால், எங்களுக்குச் சுலபத்தையும், நேயர்களுக்கு தன லாபத்தையும் கொடுக்கும்.

மானேஜர்,

லக்ஷ்மி ஆபீஸ்,

சென்னை.

(இந்த இடத்தில் ஆபீஸுக்கு ஏதாவது தெரிவிக்க வேண்டியதிருந்தால் தெரிவிக்கலாம்.)

'பாரிஸ் பொம்பையா'

வாசனை லோஷன்!

வெயிலின் கொடுமையால் உண்டாகும் வியர்வையின்
துர்க்கந்தத்துக்கும், வெயற்குரு உண்டாவதற்கும்

நீங்கள் கவலைப்பட வேண்டாம்!

நமது வாசனை பொருந்திய, பொம்பையா லோஷனில் ஒரு புட்டியைத் தருவித்து, தாங்கள் ஸ்நானம் செய்யும் ஜலத்தில், 4, 5, முதல் 10-துளிகள் வரை சேர்த்து ஸ்நானம் செய்தால் தேகத்தின் துர்க்கந்தம் மாறிப்போவதோடு, தேகத்துக்கு குளிர்ச்சியையும் தந்து, எப்பொழுதும் நல் வாசனையைக் கொடுக்கும்.

புட்டி 1-க்கு விலை ரூபாய் 2—4—0

கியாதிபெற்ற

காசி ஊதுவத்திகள்!

ஒரு முறை இந்த ஊதுவத்திகளை உபயோகித்து பார்ப்பீர்களாகில் மற்ற எந்த விதமான வத்திகளையும் வாங்க மாட்டீர்கள். சிறந்த வாசனைத் திரவியங்களால் நவாப் தர்பாரில் கியாதி பெற்ற ஒருவரால் செய்யப்பட்டவை.

சவ்வாது வத்தி	சேர் 1-க்கு	ரூ. 6—0—0
அம்பர் வத்தி	,,	ரூ. 5—0—0
கிலீட் வத்தி	,,	ரூ. 3—8—0
மட்டிப்பால் வத்தி	,,	ரூ. 2—0—0

ஒரே முறை பரீக்ஷித்து பாருங்கள்! உண்மை விளங்கும்!!

கே. எஸ். முத்தையா கம்பெனி

சென்னை.

B

உங்கள்

குழந்தைகளை நேசிக்கிறீர்களா?

நேசிப்பதாயின்,

இன்றே உங்கள் குழந்தைகளுக்கு
பித்தளை விளையாட்டு சாமான்
செட் ஒன்று வாங்கிக் கொடுங்கள்!

குழந்தைகளைக் குதூகலப்படுத்த இதைவிட விளையாட்டுக் கருவிகள் சிறந்தது வேறொன்றுமில்லை. குழந்தைகள் மனதை ரமிக்கச் செய்யும், இந்தியர்களின் வீட்டில் சமையல் செய்யும் — பாத்திரங்களைப் போன்ற வடிவுள்ளவை. ஒவ்வொரு ஜோடிப்பிலும் 32— சாமான்கள் உள்ளன. அவை முற்றிலும் பித்தளையினல் செய்யப்பட்டு மிகுந்த பளபளப்போடிருக்கும்.

நெ. 1. ஜோடிப்பு
விலை ரூபா 4—8—0

நெ. 2. ஜோடிப்பு
விலை ரூபா 3—4—0

கே. எஸ். முத்தையா கம்பனி,

ஸில்க் ஹவுஸ் :: :: பனாரஸ் ஸிடி.

ராய்பகதூர் பி. சுந்தரம்பிள்ளை, M.A., F.R.H.S., M.R.A.S.

1. பத்துப்பாட் டாதிமனம்
பற்றினர் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையும்
இலக்கணமில் கற்பனையே.

2. வள்ளுவர்செய் திருக்குறளை
மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி
ஒருகுலத்துக் கொருநீதி.?

3. மனங்கரைத்து மலங்கெடுக்கும்
வாசகத்தின் மாண்டோர்கள்
கனஞ்சடையென் றருவேற்றிக்
கண்மூடிக் கதறுவரோ ?

ஓம்

லக்ஷ்மி

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

சித்திரப் படங்களுடன் கூடியது.

பத்திராதிபர் : கே. எஸ். முத்தையா.

பத்திராசிரியர் : க. ச. சுந்தரம் பிள்ளை.

மலர் ௪. | அக்ஷய வூ அற்பிசி மீ 1926 அக்டோபர் மீ | இதழ் ௩.

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	... 93
2.	புதிய ஆத்தி சூடி	... 94
3.	பண்டை இந்தியாவில் கிராமவாழ்க்கை	... 95
4.	உலகில் சிறந்த யூதர் பன்னிருவர்	... 103
5.	போலித் துறவு	... 107
6.	மதங்களும் மாமிஸ போஜனமும்	... 109
7.	பாலிய விதவைகள் ...	... 113
8.	இன்பமும் துன்பமே ...	... 117
9.	விதவா விவாக விளக்கம் ...	... 122
10.	மதிப்புரை	131, 137
11.	உண்மை, புகழ், பொருள் ...	... 132
12.	தாய்நாட்டிற்கு உயர் வளித்தல் ...	... 134
13.	இச் செயலுடையோர்க் கிடீ தில்லை	... 134
14.	ரகுமாரன்	... 138

லக்ஷ்மி

சந்தா விவரம்.

இந்தியா, பர்மா, ரங்கூன், சிலோன் முதலிய உள் நாடுகளுக்கு வருட சந்தா	ரூ. 2 0
சிங்கப்பூர், பினங்கு, ஆப்பிரிக்கா முதலிய போன்ற வெளி நாடுகளுக்கு வருட சந்தா	ரூ. 2 8

தனிப்பிரதி விலை அணா 3.

கவனிப்பு

நமது லக்ஷ்மி ஒவ்வொரு மாதம் 30-தேதியிலும் வெளியாகும்.

எப்பொழுது சந்தா நேயர்களாகச் சேர்ந்தாலும் அந்தந்த மலரின் முதல் ஸஞ்சிகையி லிருந்தே அனுப்பப்படும்.

பத்திரிகை நேயர்களுக்குக் கிடைக்க வேண்டிய குறிப்பிட்ட தேதியில் கிடைக்காவிட்டால் இந்தியாவிலுள்ள நேயர்கள் 10-தேதிக்குள்ளும் கப்பல் பிரயாணத்தையுடைய நாடுகளிலுள்ள நேயர்கள் 15-தேதிக்குள்ளும் சந்தா நெம்பருடன் தெரிவிக்க வேண்டும்.

எது விஷயத்தைப்பற்றி ஆபீஸுக்கு லட்டர் எழுதினாலும் சந்தா நம்பருடன் தெரிவிக்க வேண்டும். சந்தா நம்பர் லக்ஷ்மியின் கவரில் குறிப்பிட்டிருக்கும்.

லக்ஷ்மியில் பிரசுரிப்பதற்கு விஷயங்கள் அனுப்ப விரும்பும் நேயர்கள் ஒவ்வொரு மாதம் 15-தேதிக்குள் மையினால் எழுதி யனுப்ப வேண்டும்.

நேயர்கள் இடம் விட்டு இடம் மாறினால் மாறுதல் விலாசத்தை 25-க்குள் சந்தா நம்பருடன் தெரிவிக்க வேண்டும்.

லக்ஷ்மியில் உள்ளூர் விளம்பரங்களும், வெளியூர் விளம்பரங்களும், பிரசுரிக்க எடுத்துக் கொள்ளப்படும். சார்ஜ் விஷயமாக, ஆபீஸுக்கு எழுதியாவது நேரிலாவது பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்.

லக்ஷ்மி ஆபீஸ்,

188, கோவிந்தப்ப நாயக்கன் தெரு,

டெலிபோன் 2692 மதராஸ்.

லக்ஷ்மி துதி

செய்ய பொன் மேனித் திருவே
செந்தாமரைச் சீர் மகளே
கையகத்துஞ் செழுந் தாமரை யேந்துங்
கனங் குழையே
வைய முற்றோர் குடைக் கீழ்
வைத்துளாரை மறந்தனையே
ஐயமிங் கேற்பினு மெய்தாமல்
யேங்கி யலைகு வரே.

புதிய ஆத்திசூடி.

(பாரதி)

(முன் தொடர்ச்சி.)

சிதையா நெஞ்சு கொள்
சீறு வோர்ச் சீறு
சுமையினுக் கிளைத் திடேல்
சூரரைப் போற்று
செய்வது துணிந்து செய்
சேர்க்கை யழியேல்
சைகையிற் பொரு ளுணர்
சொல்வது தெரிந்து சொல்
சோதிடந் தனை யிகழ்
சௌரியந் தவறேல்
ஞமலி போல் வாழேல்
ஞாயிறு போற்று
ஞிமிறென இன்புறு
ஞெகிழ்வ தருளின்
ஞேயங் காத்தல் செய்
தன்மை யிழ வேல்
தாழ்ந்து நட வேல்
திருவினை வென்று வாழ்
தீயோர்க் கஞ்சேல்
துன்ப மறந்திடு
தூற்றுத லொழி
தெய்வ நீ யென் றுணர்
தேசத்தைக் காத்தல் செய்
தையலை உயர்வு செய்
தொன்மைக் கஞ்சேல்
தோல்வியிற் கலங்கேல்

பண்டை இந்தியாவில் கிராம வாழ்க்கை

(ஸ்ரீமான் வே. சாமிநாத சர்மா எழுதியது.)

இந்தியாவின் ஜனத்தொகையில் முக்காலே மூன்று வீசம் பங்கினர் கிராமவாசிகளே என்பது ஜன கணித அறிக்கையினால் நன்கு புலப்படும். ஆனால் தற்கால நாகரிகப் போக்கானது, கிராம வாழ்க்கையில் வெறுப்பும் நகர வாழ்க்கையில் விருப்பும் ஏற்படும்படி செய்து வருகிறது. இது விசனிக்கத் தக்கது. இந்த உணர்ச்சி அதிகரித்துக் கொண்டே போனால் இந்தியாவின் பிற்கால வாழ்வில் பல இன்னல்கள் நேரும் என்பதில் ஐயமில்லை.

இந்தியாவில் இது காலை பல விதமான அரசியற் கட்சியினர் இருக்கின்றனர். இவர் அனைவரும் மத்திய அரசாங்கத்தில் சீர்திருத்தம் செய்யவேண்டும் என்றும் மாகாண அரசாங்கங்களில் சீர்திருத்தம் வேண்டுமென்றும் பல விதமாகக் கேட்கின்றனர். மத்திய அரசாங்கமாகிற இந்தியா அரசாங்கத்தில் ஜனப் பொறுப்பாட்சி ஏற்பட்டு விட்டால், கிராம ஆட்சி யாதிய மற்றெல்லா அரசியல் உறுப்புகளும் தாமாகவே சீர்ப்பட்டு விடும் என்பது இவர்கள் கொள்கை போலும். இது வாதத்திற்குப் பொருந்துகிறதாயினும் அநுபவத்திற்கு ஒவ்வாததா யிருக்கிறது. மற்றும் இத்தகைய சீர் திருத்தத்தினால் நிலையான நன்மை ஏற்படாது. உறுதியான அஸ்திவார மில்லாத கட்டிடம் எங்ஙனம் நீண்ட நாட்கள் இருக்க முடியாதோ அதைப் போல் கிராம வாழ்க்கையைப் பண்படுத்தாத, அதனைச் சீர்பெறச் செய்யாத, எந்த ஆட்சிமுறையும் நிலைத்திராதென்க.

இந்தியாவின் மீது எத்தனையோ சமூகத்தினர் படையெடுத்து வந்தனர்; எத்தனையோ அரசியற் றலைவர்கள் தோன்றி மறைந்தனர்; தில்லியில் எத்தனையோ பரம்பரையினர் செங்கோலோச்சி வீழ்ந்தனர். ஆனால் ஹிந்து நாகரிகம் இன்னும் அழியவில்லை; ஹிந்து தர்மங்கள் மறைந்து போகவில்லை. இந்தியாவின் ஜீவநாடி இன்னும் துடித்துக் கொண்டுதா னிருக்கிறது. எத்தனையோ ஆயிர வருஷங்களுக்கு முன் நமது மூதாதையர்களால் ஏற்றிவைக்கப் பட்ட ஞான விளக்குகள் இன்னும் இந்தியாவின் மூலை முடுக்குகளி லெல்லாம் பிரகாசித்துக்கொண்டுதா னிருக்கின்றன. இதற்குக் காரணம் என்ன? இரண்டு காரணங்கள் கூறலாம். கிராம ஆட்சி யாகிற அஸ்திவாரம் பலமா யிருந்தது ஒன்று. இந்தியாவில் அரசியலும் சமூக வாழ்க்கையும் வேறுபட்டதா யிருந்தது இரண்டாவது காரணம். இவைகளைச் சிறிது விரித்துக் கூறுதல் அவசியமா யிருக்கிறது. முற் காலத்தில் ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு சிறிய குடியரசா யிருந்தது. அந்தந்தக் கிராமத்தின் தேவைகளையும், அவைகளின் குறைகளையும் அந்தந்தக் கிராமத்தினரே கவனித்துக்கொண்டு வந்தனர். இராஜ்ஜியத்தின் தலை நகரத்தில் எந்த அரசன் வாழ்ந்தாலும் எந்த அரசன் வீழ்ந்தாலும் அதனால் இவர்களுடைய நிலைமை சிறிதும் மாறுபடுவதற்குக் காரணமில்லாம லிருந்தது. கிராம வாழ்க்கையும் கிராம ஆட்சியும் சமூக வாழ்க்கையில் ஒன்றுபட்டதா யிருந்தது. அரசியல் வேறுபட்டதா யிருந்தது. அரசியலுக்குத் தலைவனுயுள்ள அரசன், சமூகத்தில் ஒருவனாக, சமூக வாழ்க்கையில் கலந்த ஒருவனாகக் கருதப் பட்டானே யன்றி அச்சமூகத்திற்கும் தலைவனாகக் கருதப் படவில்லை. இதனாலேயே, இந்தியாவில் அரசியல் மாற்றத்தோடு சமூகவாழ்க்கையும் மாறுபட.வில்லை. ஜனங்களுடைய உயிரையும் பொருளையும் காப்பாற்றுதல், அவைகளுக்காக வரி வசூலித்து அவைகளைச் சரியானபடி விநியோகித்தல்

இவைகளே அரசனுடைய வேலைகளாக இருந்தன. சமூகத்தின் ஆசார விவகாரங்களை மாற்றுவதற்கோ, அதன் வாழ்க்கையை வேறு விதமாகத் திருப்பி அமைக்கவோ அவனுக்குத் தனியான அதிகாரமில்லை. சமூக ஒழுங்குக்கு அவன் கட்டுப்பட்டிருந்தான். அவன் சமூக ஒழுங்கைக் கட்டுப்படுத்தவில்லை. சமூக ஒழுங்குக்கு மீறி அரசன் நடப்பதில்லை. எனவே, இந்தியாவில் பல சமூகத்தினர் படையெடுத்து வந்து, பல நூறு வருஷங்களாகச் சிம்மாசனத்திலிருந்து கோலோச்சி வந்தார்களேயாயினும், அவர்கள் ஜனசமூகத்தின் ஒழுங்குக்குக் கட்டுப்பட்டுத்தான் போனார்கள் என்று சொல்லவேண்டும். அவ்வப்பொழுது சிம்மாசனமேறிய அரசனுடையவும் அவன் சமூகத்தினருடையவும் பழக்க வழக்கங்களை இந்திய சமூகம் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஹிந்து சமூக வாழ்க்கைக்குச் சரியாக, அந்தந்த அரசர்கள் தங்களைச் சரிப்படுத்திக்கொண்டார்கள் என்று கூறவேண்டும். இச்சமயத்தில் ஸர் ஜார்ஜ் பர்ட்வுட் என்ற அறிஞர் தாம் எழுதிய ஒரு நூலில் கூறிய வார்த்தைகள் ஞாபகத்திற்கு வருகின்றன. அவை வருமாறு :—

"உலகத்திலுள்ள மற்றெல்லா நாடுகளைக் காட்டிலும் இந்தியாவில் தான் மதப் புரட்சிகளும் அரசியற் புரட்சிகளும் அதிகமாக ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் கிராம நிர்வாகம் தளரா ஊக்கத்துடன் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. ஸ்கைத்தியர், கிரேக்கர், சாரசேனர், ஆப்கானியர், மங்கோலியர் முதலியோர் மலைகளின் வழியாகவும் போர்த்துக்கேஸியர், டச்சுக்காரர், இங்கிலீஷ்காரர், பிரெஞ்சுக்காரர், டேனிஷ்காரர் முதலியோர் சமுத்திர மூலமாகவும் இந்தியாவுக்கு வந்து தங்கள் ஆட்சிகளை ஸ்தாபித்தார்கள். ஆனால் சமுத்திர அலையின் போக்குவரத்தினால் ஒரு பாறையானது எப்படி அசையாமலிருக்கிறதோ அதைப்போல் இந்தியாவின் கிராமஸ்தாபனங்களும் கிராம

வாழ்க்கையும் இவர்களுடைய படையெடுப்பினுலும் இவர்களுடைய படை வீழ்ச்சியினுலும் மாறவில்லை.''

இது முற்றிலும் உண்மை. சுமார் எண்ணூறு வருஷம் இந்தியாவில் முகம்மதியர் ஆட்சி நடைபெற்றதென்று கூறலாம். இந்தப் பாகத்தைச் சரித்திரக்காரர்கள் 'முகம்மதியர் காலம்' என்று கூறுகிறுர்கள். ஆனுல், இது முற்றிலும் சரியாகாது. முகம்மதியருடைய ஆட்சி நிலவியதே யாயினும் ஹிந்து சமூக வாழ்க்கையும், ஹிந்து தர்மங்களும் மாறவில்லை. ஹிந்துக்களுடைய ஞான ஊற்ருனது வறட்சியடைய வில்லை. நெருப்பிலிட்ட பொன்னுனது பிரகாசத்தை அதிகமாக அடைவதைப்போல், மேற்கூறப்பட்ட எண்ணூறு வருஷ காலத்தில் சமூகப் பற்றுடையவர்களும் மதப் பிரசாரகர்களும், பிரபலமான அறிஞர்களும் ஹிந்து சமூகத்தில் அதிகமாகத் தோன்றினுர்கள் என்று கூறவேண்டும். கி. பி. எட்டாவது நூற்ருண்டில் குமாரில பட்டர் என்பவர் தோன்றி வேதங்களில் கூறப்பட்டபடி சுலபமான வழியில் மனிதன் கிரியைகளைச் செய்யவேண்டு மென்று உபதேசித்தார். ஒன்பதாவது நூற்ருண்டில் தென்னுட்டில் சங்காசாரியார் தோன்றி திக்விஜயஞ் செய்து அத்வைத மத ஸ்தாபனம் செய்தார். ராஜ புத்திரர்களுடைய ஆதிக்கம் வட இந்தியாவில் ஏற்பட்டதும் ஹிந்து மதத்திற்குப் புதிய பலம் ஏற்பட்டதென்று சொல்லலாம். ஹர்ஷன், பவபூதி, பில்ஹணன், கல் ஹணன் முதலிய பேரறிஞர்கள் தோன்றி ஹிந்து சமூகத்தின் வற்ருத ஞான ஊற்றை அனைவருக்கும் வழங்கினுர்கள். சாயனர், வித்தியாரண்ணியர் முதலியவர்களுடைய துணைகொண்டிருந்த விஜய நகர ராஜ்ஜியம் ஹிந்து சமூகத்தின் அழியாத் தன்மைக்குப் பேரிலக்கியமாயிருந்தது. மொகலாய ஆட்சியில் ஹிந்து தர்மமானது செழித்தோங்கி யிருந்தது. அக்பருடைய ஆட்சிக் காலத்தில் எத்தனையோ ஹிந்து அறிஞர்கள், கவிஞர்கள், வீரர்

கள் தோன்றி அம்மன்னர் பிரானுடைய ஆதரவைப் பெற்று வாழ்ந்து வந்ததை எவர் மறக்க முடியும்? இவை களுக்கெல்லாம் காரணம் முன்னர்க் கூறப்பட்ட இரண்டே யாகும்.

இனி, கிராம ஆட்சியைப்பற்றிச் சிறிது கவனிப்போம். ஒவ்வொரு கிராமத்தின் நிர்வாகத்தையும் அந்தந்த கிராமத்தில் ஏற்பட்ட சபைகள் கவனித்துக்கொண்டு வந்தன. வேதகால முதற்கொண்டே இந்தக் கிராம சபைகள் இருந்தன வென்று தெரிகிறது. இதிகாச புராணங்களிலும், தர்ம சாஸ்திரங்களிலும் இந்தக் கிராம சபைகளைப்பற்றியும் இவைகள் எங்ஙனம் நிருவகிக்கப்பட வேண்டுமென்பதைப் பற்றியும் பிரஸ்தாபங்கள் காணப்படுகின்றன. அர்த்த சாஸ்திரமும், சுக்கிர நீதியும் இவைகளைப்பற்றி விரிவாகக் கூறுகின்றன. ஆனால், அவைகளைப்பற்றி யெல்லாம் ஈண்டுப் பிரஸ்தாபியாமல், தென்னாட்டைப் பொறுத்தமட்டில் கிராம சபைகள் எங்ஙனம் நடைபெற்றன என்பதைச் சாஸனங்களை ஆதாரமாகக் கொண்டு, சுருக்கமாகக் கூற முயல்கிறேன். எவ்வித நூல்களும் தற்போது நான் இருக்குமிடத்தில் கிடைக்காமையால், என் நினைவி லிருப்பதை ஆதாரமாகக்கொண்டே இக்கட்டுரையை எழுதுகின்றேனாதலின் இதிலுள்ள பிழைகளை மன்னிக்கும்படி அன்பர்களை வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

கிராம சபைகள் கிராமவாசிகளுடைய வைதீக வாழ்க்கைக்கும் லௌகிக வாழ்க்கைக்கும் துணை புரிந்தன. கிராம ஜனங்கள் ஒழுக்க நிலை தவறாதவர்களா யிருக்கவேண்டுமென்பதிலும், கோயில், மடம் முதலியவைகளைச் சரியாகப் பரிபாலனம் செய்வதிலும், ஜனங்களுடைய சுகாதாரம், கல்வி வசதி முதலியவைகளைக் கவனிப்பதிலும் கிராம சபைகள் கவலை செலுத்தி வந்தன. இச்சபைகள், பெரும்பாலான சமயங்களில், அரசனுடைய துணையில்லாமலே, நீதி வழங்கி வந்தன. இச்சபையினருடைய தீர்ப்புகளுக்கு

ஜனங்கள் கட்டுப்பட்டு நடந்தது குறிப்பிடத் தக்கது. ஜனங்களிடத்தில் ஒற்றுமை உணர்ச்சியும், பொது நல ஊக்கமும், இக்கிராம சபைகளின் நிர்வாகத்தின் கீழ் காணப்பட்டன. கிராம நலமே தன்னுடைய நலம் என்று ஒவ்வொருவனும் நினைத்துக்கொண் டிருந்தான். கிராமத் தொழிலாளர்கள் தங்களுடைய தொழில்களைச் செய்து அவரவர்களுக் கென்று வகுக்கப்பட்ட தானிய ஊதியத்தைப் பெற்றுக்கொண்டு, கிராம வாசிகளுக்குக் கவலையில்லாமல் செய்ததோடு தாங்களும் கவலையற்று வாழ்ந்திருந்தார்கள்.

கிராம சபைகளின் நிர்வாகத்தைப்பற்றித் தமிழ் நாட்டில் பல விதமான சாஸனங்கள் அகப்பட்டிருக்கின்றன. இவைகளை அவ்வப்பொழுது கண்டு பிடித்து, வருஷந்தோறும் அறிக்கைகள் மூலமாகவும் புத்தகங்கள் மூலமாகவும் வெளியிடும் சிலாசாஸன ஆராய்ச்சி இலாகாதாருக்குத் தமிழ் நாட்டார் என்றுங் கடமைப்பட்டிருக்கிறார்கள். செங்கற்பட்டு ஜில்லா உத்திரன் மேரூர் கிராமத்தி லிருக்கும் வைகுண்டப்பெருமாள் கோயிலில் உள்ள சாஸனங்களில், கிராம சபையின் நிர்வாகத்தைப்பற்றியும் அங்கத்தினர்கள் தெரிந்தெடுக்கப்படும் விதத்தைப்பற்றியும் விரிவாகக் கூறப்பட் டிருக்கின்றன. இதைப் பற்றிச் சரித்திரகாரர்கள் ஆராய்ச்சிசெய்து பல இடங்களில் பல சமயங்களில் பிரசுரம் செய்திருக்கிறார்கள். அச்சாஸனங்களில் கூறப்பட்டுள்ளனவற்றையே ஈண்டுச் சுருக்கமாகக் கூறுகிறேன். கிராமத்தை நிருவாகம் செய்வதற்கென்று பொதுவான ஒரு சபையும், அந்தந்த விஷயங்களைக் கவனிப்பதற்கென்று, மேற்படி சபையின் அதிகாரத்திற் குட்பட்ட சில சிறு குருக்களும் இருந்தனர். இந்தச் சபைகளின் அங்கத்தினர் வருஷத்திற் கொரு முறை தெரிந்தெடுக்கப் படுவார்கள். 360 நாள் இவர்கள் அங்கத்தினர் பதவியை வகிக்கலாம் என்று சாஸனம் கூறுகிறது. முதலிற் கூறப்பட்ட சபைக்கு "சம்வத்ஸா

வாரியம்'' என்று பெயர். "சம்வத்ஸர கிராம காரியத்தை" யும் இவர்கள் கவனிக்கவேண்டும். "இந்த சம்வத்ஸர வாரியத்''தில் பன்னிரண்டு அங்கத்தினர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். முதிர்ந்த அனுபவ முடையவர்களும் கிராம வாசிகளுடைய பூரண அபிமானத்தைப் பெற்றவர்களுமே இதில் அங்கத்தினராதற் குரியரா யிருந்தனர். இது தவிர கிராமத்திற்குப் பொதுவான தோட்டம் தோப்பு, நந்தவனம் முதலியவைகளைக் கவனிப்பதற்கென்று பன்னிரண்டு அங்கத்தினர்க ளடங்கிய ஒரு குழுவும், குளம் ஏரி முதலியவைகள் சம்பந்தமான விஷயங்களைக் கவனிப்பதற்கென்று ஆறு அங்கத்தினர்க ளடங்கிய ஒரு குழுவும், நாணய மாற்று முதலியவைகளைப் பற்றிக் கவனிப்பதற்கென்று ஆறு அங்கத்தினர்க ளடங்கிய ஒரு குழுவும், தானியங்கள் மூலமாக வரி முதலியன வசூல் செய்வதற்கென்று ஒரு குழுவும் இருந்தன. பிற் கூறப்பட்ட இந்தக் குழுக்களின் வேலைகளை முற் கூறப்பட்ட "சம்வத்ஸர வாரியம்'' என்ற சபையினர் மேற் பார்வை செய்துவந்தனர் போலும். இந்தச் சபைகளுக்கு அங்கத்தினர்களாக எல்லாரும் தெரிந்தெடுக்கப்படவில்லை. அபேட்சகர்களாக நிற்கச் சில யோக்கியதைகள் இருக்கவேண்டுமென்று நிபந்தனைகள் இருந்தன. அபேட்சகர்களாக நிற்கக் கூடியவர்கள்:

1. வரிசெலுத்தக் கூடிய கால் வேலி நிலம் உடையவராக இருத்தல்வேண்டும்.

2. தம்முடைய சொந்த நிலத்திலேயே வீடுகட்டிக் கொண்டிருப்பவராய் இருக்கவேண்டும்.

3. எழுபது வயதுக் குட்பட்டவ ராகவும் முப்பத்தைந்து வயதுக்கு மேற்பட்டவராகவும் இருக்கவேண்டும். (மற்றொரு சாஸனத்தில் முப்பது வயதுக்கு மேற்பட்டவராகவும் அறுபது வயதுக் குட்பட்டவராகவும் இருக்க வேண்டுமென்று சொல்லப்பட் டிருக்கிறது)

210362

4. வேத பாடங்களைச் சொல்லிக் கொடுக்கக்கூடிய யோக்கியதையுடையவராக இருக்கவேண்டும்.

5. அரைக்கால் வேலி நிலமுடையவரா யிருந்தால் அதற் கீடாக ஒரு வேதத்திலும் ஒரு பாஷ்யத்திலும் வல்லமை பெற்றிருக்கிறவரா யிருக்கவேண்டும்.

6. வேலை யனைத்தும் தெரிந்தவரா யிருக்கவேண்டும்.

7. ஒழுக்க முடையவர்களாகவும், நாணயமாகப் பணம் சம்பாதித்தவர்களாகவு மிருக்கவேண்டும்.

இதனின்றும் சபையின் அங்கத்தினர்களாகத் தெரிந்தெடுக்கப்படும் விஷயத்தில் எவ்வளவு கவலை செலுத்தப்பட்டது என்பது நன்கு புலப்படும். கிராமத்திற்குப் பொதுவான மண்டபத்திலோ அல்லது கோயில்களிலோ தேர்தல் நடைபெற்றது. கிராம ஜனங்கள் ஆண், பெண் அடங்க எல்லாருடைய முன்னிலையிலேயும் தேர்தல் நடைபெற வேண்டுமென்ற விதி இருந்தது. பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட எவரும் வாக்குக்கொடுக்கலாம் என்ற விதியிருந்தது. அபேட்சகர்கள் தெரிந்தெடுக்கப் படுவதில் சீட்டுக் குலுக்கிப்போடும் முறையே அநுஷ்டிக்கப்பட்டது. இந்தக் கிராமத் தேர்தல்களைப்பற்றி விரிவாகப் பிறிதொரு முறை எழுதுகின்றேன்.

கிராம நிருவாக சம்பந்தமான கணக்குகளை வைப்பதில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. தேர்தல் காலங்களில் மத்தியஸ்தர்களா யிருந்து அநுபவம் பெற்றவர்களும், நாணயமான வழியில் பணம் சம்பாதித்தவர்களுமே கிராமக் கணக்கர்களாக இருக்கவேண்டுமென்று நிபந்தனை இருந்தது. அந்தந்த வருஷத்துக் கணக்கை ஆஜர்ப்படுத்தி அது பொதுச் சபையாரால் அங்கீகரிக்கப் பட்டாலன்றி அந்தக் கணக்கு உத்தியோகஸ்தர் மறு வருஷத்திற்குத் தெரிந்தெடுக்கப்படுவ தில்லை. நிர்வாக சபை, ஆளுங் கணத்தார், கணம், கணப்பெருமக்கள் முதலிய பெயர்கள் அக்காலத்தில் கிராம நிருவாக சம்பந்தமாக வழங்கப்பட்டன. கிராம

வாசிகள் பொதுநல ஊக்கமுடையவர்களா யிருந்தார்கள். பொது நலத்திற்காக ஆவி துறந்த பெருமக்களின் வீரச் செயல்களுக்குப் பல உதாரணங்கள் சாஸனங்களில் காணப் படுகின்றன. மற்றும் பொதுநலத்திற் கென்று வித்தியா சாலைகளும் ஆஸ்பத்திரிகள் என்று சொல்லப்படும் சிகிச்சா சாலைகளும் கிராம சபையினரால் நிருவகிக்கப்பட்டு வந்தன. இலவசக் கல்வி பாமர ஜனங்களுக்கு அக்காலத்தில் வழங்கப் பட்டு வந்தது என்று சொன்னால் இக்காலத்தவர் ஆச்சரியப் படுவர் என்பதில் ஐயமுண்டோ? இவைகளைப்பற்றி விரி வாக அடுத்த சஞ்சிகையில் எழுதுகிறேன்.

உலகில் சிறந்த யூதர் பன்னிருவர்

(ஸ்ரீமான் B. S. குமாரசுவாமிப் பிள்ளை யவர்கள் எழுதியது.)

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான்"—திருக்குறள்

இவ்வுலகில் ஜாதி வருணம் சமயம் எனப் பகுத் தறியாது சிறந்த கல்வி யறிவாளர்கள் எவராயினுஞ் சரி, அவர்தம் இயல்பினை நன்குணர்ந்து கற்றறிந்து அவரது முயற்சிப் பயனைக் கையாடி அவரைப் பின் பற்றுவோ மாயின் இன்னல் களைந்து இன்பம் எய்துவோம் என்பதற்கு ஐய மில்லை. அவ்வாறு உற்று நோக்கு மிடத்துத் தற்சமயம் சிறந்த பெரிய விவேகிகளான யூதர்கள் பன்னிருவ ரெனக் கூற வேண்டிய திருக்கிறது. அவர்களது வரலாற்றைச் சுருங்கக் கூறின் இப்பத்திரிகை வாசிப்போருக்கு மிகுந்த உவகை தருமெனக் கூறத் துணிவேன்.

சுயநலங் கருதாது உலக முன்னேற்றம் சமுதாய அபி விருத்தி அறிவின் வளர்ச்சி இவற்றுக்காகத் தம் வாழ்நாள் முழுமையும் உழைத்து அவ்வுழைப்பின் பயனைய் நமக்குத் தந்தருளிய தத்துவ உண்மைகளை ஆராய்ச்சி செய்வது நமது கடமை யாகும்.

யூதர் பன்னிருவர்.

1. உலகில் சிறந்த ஜடசாஸ்திரம் வானசாஸ்திரம் இவைகளின் நுண்ணறிவை மிகுந்த ஆழ்ந்த கருத்துடன் ஆராய்ச்சி செய்து இவைகளுக்கோர் புத்துயி ரளித்து; பேர் விளங்கும் கணித சாஸ்தியார் நீயூட்டன் என்பவரிலும் மிகச் சிறந்தவராய்த் துலங்குகின்றார் ஆல்பெர்ட் ஈன்ஸ்டின் (Albert Einstin) என்பவர். இவரது நூல்களும் பிர சங்கங்களும் மிகவும் பிரபல்லியமாய் உண்மையை விளக்கு கின்றன.

2. செய்மி வீஸ்மான் (Chaimes Weisman) என் பவர் யூத சமய அபிவிருத்திக்காக ஒரு புதிய கிளர்ச்சி உண்டுபண்ணி யிருக்கிறார். ஐரோப்பிய மஹாயுத்தத்தில், வெடிக்குண்டுகள் எல்லாவற்றிலும் மஹா கொடூரமாய் நொடிப்பொழுதில் உயிரை மாய்க்கும் டி-யன்-டி (T. N. T.) என்ற அக்கினிக் கொலை செய்யும் குண்டுகளை அபிவிருத்தி செய்த ஜட சாஸ்திரியார் இவரே யாவர்.

(3) லூயி பிராண்டிஸ் (Louis Brandes) இலக் கிய நூற்களின் தத்துவங்களை உலகிலுள்ளோர் உள்ள வாறு கற்றுணர்ந்து கொள்ளுமாறு போற்றவேண்டும் நூற்களைப் போற்றிப் புகழ்ந்தும், சிதைத்து விலக்கவேண் டிய நூற்களை தலையெழ விடாமற் சிதைத்தும் பல நூற்கள் வியாசங்கள் எழுதியுள்ளார். அஞ்சா மனதுடைய அறிவாளரில் ஒருவர்.

(4,5,6) உலகில் சிறந்த மூன்று வக்கீல் பாரிஸ்டர் கள் யாவர்? ரீடிங் பிரபு (Lord Reading), மார்ஷல், (Marshall) ஜார்ஜ் பிராண்டிஸ் (George Brandes) இம் மூவரே யாவர். இந்தியாவில் மன்னர் பிரானுக்கு அடுத்த பதவியில் உத்தியோகங்களில் எல்லாம் சிறந்த உத்தியோகப் பதவியைப் பெற்றிருந்தார் ரீடிங் பிரபு. பொது ஜனங் கள் நன்மையின்பொருட்டுக் கூட்டுறவுச் சட்டத்திற்கு அதி பதியாய் நின்று சமுதாய முன்னேற்றத்தை எப்பொழு தும் நாடுகின்றார் மார்ஷல் என்பவர். சமுதாய முன் னேற்றத்தைக் கருதுவதுடன் உயர்தர நீதி மன்றங்க ளுக்குத் திலகம் போன்றவரும் யூதர்க்ள் முன்னேற்றத்தை என்றும் நாடுபவரும் ஜார்ஜ் பிராண்டிஸ் என்பவர்.

(7) இஸ்ரேல் ஸாங்வில் (Israel Zangwill) ஆத்மாவும் ஆனந்த மடையுமாறு கதைக்கொத்துகள் எழுதி அவைகளின் ஊடே லௌஹீக சாஸ்திரீக உண்மைகளை அமைத்து யாவரும் கற்றுக் களிக்குமாறு கடிதங்கள் பல எழுதியுள்ளார். சமுதாய அபிவிருத்திக்கும் கூட்டுறவுக்கும் ஒப்வில்லாது மல் யுத்தஞ் செய்யும் தைரியம் உடையவர்.

(8) பரோபகாரத்தின் பொருட்டுப் பெரும் பொருள் வாரி யிறைத்துத் தனது சமயத்தையும் சௌகரியத்தையும் அவர் பொருட்டுத் தத்தஞ்செய் திருக்கின்றார் நாதன் ஸ்டிராஸ் (Nathan Staraws) என்ற மஹா பிரபு. அவரைக் கருணைக் கடலாகின்ற கர்னன் என்றே சர்வ தேசத்தாரும் கூறுகின்றார்.

"இன்னுசெய் தார்க்கு மினியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"

என்ற படி அரும்பெருங் குணமுடையார் இவர்.

(9) பிரஞ்சு தேசத்தின் அணிகலமாய் விளங்குபவரும் தற்கால தத்துவ சாஸ்திரங்களுக்கு ஆதாரமாய் இலக்கிய இலக்கணங்களிலும் நுண்ணறிவாளராய் பூலோக நவரத்தினங்களில் எல்லாவற்றிலும் உலக நடுவில் குற்றமற்ற வைர ரத்தினமாய்ப் பிரகாசித்து எவ்வித இருளையும் அகற்றுகின்றவருமான ஹென்ரி பெர்க்ஸன் (Henry Bergsen) என்பவரைப் பற்றிக் கேட்டிராத கல்வி யறிவாளர்களும் உளரோ? சர்வ சாஸ்திரங்களிலும் இலக்கியங்களிலும் தேர்ச்சி பெற்று உண்மையை உள்ளவாறு யாவரும் ஐயந்திரிபறக் கற்றுணருமாறு இலகுவான நடையில் பல நூற்கள் இயற்றி யிருக்கிறார். அந்நூற்களின் உயர்வும் உண்மையறிவும் அவைகளைக் கற்றுணரும் கல்வி யறி வாளர்க்கே நன்கு புலப்படும். அழியாப் புகழ் பெறும் அரிய சிரேஷ்டர்களில் இவ ரொருவர்.

(10) ஸ்டீபன் ஓயிஸ் (Stephen Wise) என்பவர் "ராபீ" என்ற நோயினை அழிக்கும்பொருட்டுச் செய்திருக்கும் நன்மைகள் உலகெங்கும் தெரிந்தவை.

(11) பியாலிக்கு (Bialik) என்பவர் ஹெப்ரூ பாஷை ஒரு நாளும் அழியாதபடி என்றும் பாடிப் பேரானந்தம் அடையுமாறு இன்னிசை கொண்ட இசை காவியங்கள்

பல இயற்றி யிருக்கின்ருர். இவர் தம் பெருமையை நாம் கற்றறிந்து கொள்வது ஏலாத காரியமாயினும் யூத காவியங்கள் கற்றறியும் அறிவாளர்கள் இவரை ஓர் அரிய இசைநூல் வல்லார் எனக் கூறி இன்பம் அடைகின்ருர்கள்.

(12) ஆர்தர் ஸ்கினீட்ஸர் (Arthur Schinitzer) என்பவர். இவர் வியாசங்கள் எழுதுவதில் மிகவும் பேர் அறிவாளர். உலகில் பிரசுரிக்கப்படும் சகல இலக்கண இலக்கிய சாஸ்திரீக தத்துவ காவியங்கள் எல்லாவற்றையும் நன்ருய்க் கற்றுணர்ந்து அவைகளின் சிறப்புகளையும் குணங் குற்றங்களையும் பற்றி நீதிபதி போல அபிப்பிராயங் கூறும் கல்வி யறிவாளர்களில் இவர் ஒருவர்.

மேற்கூறிய பன்னிரு பெரியோர்களும் வாழ்ந்து வரும் நாட்டையும் கூறுவோம். இங்கிலாந்து தேசத்தில் வீஸ் மான், ஸாங்குவில், ரீடிங் பிரபு இவர்கள் வாழ்ந்திருக்கிருர் கள். அமேரிக்கா ஐக்கிய நாட்டில் (United States) மார் ஷல், லூயிஸ் பிராண்டிஸ், நாதன் ஸ்டிரான், ஒயிஸ், இவர்கள் நால்வர் வசிக்கிருர்கள். ஜெர்மனியில் ஈன்ஸ்டின் புகழ்பெற்றவ ராய் இருக்கிருர். டென்மார்க்கு தேசத்தில் ஜார்ஜ் பிராண் டிஸ் வசிக்கிருர். பியாலிக்கு என்பவர் ஐரோப்பிய ருஷியாவிலும் ஸ்கினீட்ஸர் என்பவர் ஆண்டிரியா தேசத் திலும் பெர்க்ஸன் என்பவர் பிரஞ்சு நாட்டிலும் வசிக்கின் ருர்கள். இவர்களுடைய சரிதங்களை மிகச் சுருக்கமாகக் கூறியது நமது பத்திரிகாபி மானிகள் சந்தோஷமாய்க் கற்றுணரும் இலக்கிய இன்னிசைப் பொக்கிஷத்திற்கு இவ் வியாசம் ஒரு தூண்டுகோ லாகு மென்ற நோக்கத்துடனே யாம்.

போலித் துறவு

(ஸ்ரீமான் திரு. வி. கலியாண சுந்தர முதலியார் எழுதியது.)

உலகை மாயை யெனக் கருதி அதை நீத்தல் வேண்டும் என்னும் எண்ணம் மாறி எல்லாஞ் சிவமயம் என்னும் எண்ணம் பெறுதற்குரிய வழி என்னை என்று சிந்திக்க வேண்டுவது நமது கடமை. எட்டு நூல்களைப் படிப்பதானும், காவியுடுத்தல் முதலிய கோலங்களானும், காட்டுக் கோடுவதானும் மனத்துக்கணுள்ள ஆசை நோய் போகாது. மனமாசகல வேண்டுமானல், மனிதன் இல்லற மேற்கொண்டொழுகல் வேண்டும். "மனத்துக் கண் மாசில னுதல் அனைத்தறன்" என்று அறவியல்பு அறிவுறுத்திய திருவள்ளுவனார் பின்னை இல்லற நெறியின் இன்றி யமை யாமையையும், அதற்குரிய வாழ்க்கைத் துணை நலத்தையும், புத்திரப் பேற்றையும் முறை முறையே கிளந்து கூறிச்செல்லுதல் காண்க. உலகில் இல்லற நெறி யில்லையேல் பெரியோர்கள் தோற்றத்துக்கே வழியில்லாமற் போய்விடும். மகாத்மா காந்தியின் தாய் தந்தையர் இல்லறம் நடத்தா தொழிந்திருப்பரேல் இவ்வுலகம் நம்பெருமான் காந்தியடிகளைக் கண்டிருக்க முடியுமோ? அன்பர்கள் அருளாளர்கள் பெரியோர்கள் தோன்றுதற்கு நிலைக்களனுயுள்ள இல்லறம் இன்றியமையாதது. இல்லறம் படிப் படியாக ஒருவனது மாசையும் ஒருத்தியினது மாசையும் துடைத்துக் கொண்டு போவது கவனிக்கத் தக்கது. மனிதனது தன்னலம் இல்லறத்தில் எவ்வாறு பலியாகிற தென்பதுங் கவனிக்கற் பாற்று. ஒருவன் ஒருத்தியோடு வாழ்தற்கு முன்னர்ப் பெரிதுந் தன்னையே நேசிக்கிறுன். மனைவியோடு வாழுநாள் தொட்டுத் தன்னைப் போல தன் கிழத்தியாரையும் நேசிக்கத் தொடங்குகிறுன். பின்னை அந்நேசம் பிள்ளைகளிடத்தில் பரவுகிறது. பின்னைப் பிற உயிர்களிடத்துப் பரவுகிறது. உயிர்களை நேசிக்கும் உள்ளத்தில் தன்னல மேது? திருவள்ளுவனார் வகுத்துள்ள அதிகார முறை வைப்பை நோக்குக. அறச் சிறப்பு, இல்லறம், வாழ்க்கைத் துணை நலம், புத்திரப்பேறு, அன்புடைமை, விருந்தோம்பல் இம்முறையினைக் கவனிக்க.

ஒருவன் ஒருத்தியோடு வாழாது கிடப்பது இயற்கைக்கு மாறுபாடு என்பதும் ஆராயற் பாலது. சுருங்கக்கூறின் தன்னலக் கேட்டுக்கும், அன்புப் பெருக்கிற்குங் கருவியா யிருப்பது இல்லறம் இல்லறமே யாகும்.

அவ்வில்லறத்துக் குரிய பெண்ணைப் பழிப்பதும் அவ ளாசை நீத்தல் வேண்டும் என்று சொல்வதும் என்னை என்று சிலர் வினவலாம். கடவுள் இயற்கைப் படைப்பாகிய பெண்ணை எவ்வாறு நீத்தல் இயலும்? உலகம் தாவர முதல் மனிதன் ஈறுக உள்ள எல்லாப் பொருளும், ஆண் பெண் வடிவாயிருக்க, அவைகட்குக் காரணராயுள்ள கடவுளும் ஆண் பெண் வடிவாயிருக்க, ஒரு பாதி இயற்கையை நீத்தல் வாழ்வைக் குலைப்பதே யாகும். "மண்ணாசை தன்னில் பெண்ணாசை நீத்தல் அரிதே பெரியோர் தமக்கும்" என்று ஆன்றோர் கூறிய தென்னை என்று கேட்கலாம். பெண் ணாசை துறத்தல் வேண்டும் என்பதற்கு வண்டி வண்டி யாகப் பாட்டுகள் திரட்டக் கூடும். பெண்ணாசை என்பதில் ஆசை எவரிடத்திலிருக்கிற தென்பதை அன்பர்களே! சிந்தி யுங்கள். ஆசை பிறக்கிற இடம் ஆண் மகன் மன மன்றோ? அம்மனந் திருந்தினல் பெண் மாயையாகத் தோன்று வாளோ? அவள் தெய்வமாக வன்றோ தோன்றுவாள்? பெண்ணை மாயையாகக் கருதும் பாழ் மனம் ஆடவன் பாலதே.

அம் மனமா சகற்றப் பெண்ணை விடுத்துக் காட்டுக்கோ மலைக்கோ சிலர் ஓடுகிறார். எங்கே ஓடினும் காமஞ் சுடா தொழியுமோ? பெண்ணைக் காமப் பொருளாகக் கருதிக் கொண்டிருக்கு மட்டும் மனமா சகலாது. அம்மனத்தோடு எங்கு வாழ்ந்தாலும் மனிதன் காமத்தால் எரிக்கப்படுவான். மனிதன் பெண்ணைக் காமப் பொருள் என்று எண்ணும் எண்ணத் தினின்றும் நீத்தல் வேண்டும். அவ்வாறு நீத் தாரே நீத்தா ராவர். தெய்வ வடிவாய பெண்ணையும் பிற வற்றையும் மாயையெனக் கருதி அவைகளை நீப்பது நீப்ப தாகாது. பொருளல்லவற்றைப் பொருளாகக் காட்டும் அறியாமைக் கட்டினின்றும் துறப்பதே துறவு.

மகாத்மா காந்தியைப் பாருங்கள். மகாத்மா காந்தி உலக நடுவில் மண் பொன் பெண்ணடுவில் வீற்றிருக்கிறார். அவர் பெண் மக்களைக் கண்டால் காய்ந்து விழுவதில்லை;

மாயை மாயை என்று ஓடுவதில்லை. அவர் பெண்மக்களை அன்புத் தெய்வ வடிவாகக் காண்கிறார். சுந்தர மூர்த்தி சுவாமிகள் வரலாறு உங்கட்குத் தெரியும். இயற்பகையார் சிறுத் தொண்டர் முதலிய செயற் கருஞ் செயல் செய்த தீரர்கள் பெண்ணை விடுத்துக் காட்டுக் கோடினார்களில்லை. இல்லறத் திருந்தே எல்லா உயிரையுஞ் சிவமாகக் கண்ட வரே மாயை நீத்தவ ராவர். ஆண் மக்களுடைய பாழ்மனம் பேய்மனம் பெண்ணுலகைக் கெடுப்பதை ஈங்கு விரித்துக் கூற வேண்டுவ தில்லை. ஆண்மக்கள் அறியாமையன்றோ வேசைக் கூட்டமாகப் பரிணமித்திருக்கிறது ? இக்கருத்துப் பட மகாத்மா காந்தி பாரிஸால் வேசையர் முன்னிலையில் பேசியிருக்கிறார். ஆதலால் சகோதரர்களே ! நீத்தார் என்றால் எல்லாவற்றையும் விடுத்து ஓடுவோர் என்று கொள்ளற்க. உலகை மாயையெனக் கருதும் அறியாமையி னின்றும் நீத்தவரே நீத்தா ராவார். அவர்க்கு எல்லா உயிருந் தம்முயிர் போல் தோன்றும். அவரே அந்தணர்; அறவோர். இக் கருத்துப் பற்றியே திருவள்ளுவனார் "நீத்தார் பெருமை" என்னும் அதிகார இறுதியில் "அந்தண ரென்போர் அறவோர்-மற்றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகலான்" என்று அருளிச் செய்துள்ளார்.

மதங்களும் மாமிஸ போஜனமும்

(ஸ்ரீமான் பா. ஆதிமூர்த்தி யவர்கள் எழுதியது.)

நமது பாரத நாட்டுப் பூர்வீக மதங்கள் யாவும் மாமிஸ போஜனத்தை அஸ்திவாரமாகக் கொண்டு வளர்ந்து வந்திருக்கின்றன என்று நம் நாட்டுச் சரித்திரங்கள் நமக்குக் கூறுகின்றன இங்ஙனம் நாம் கூறும்போது நமது நண்பர்கள் திடுக்கிடலாம். எனினும் நமது கொள்கையானது மிகுந்த சரித்திர சாஸ்திர அனுபோக ஆதாரங்களையுடையன வாதலால் சந்தேகப்பட வேண்டுவ தில்லை. அவ்வாதாரங்களின் சாரங்களைக் கீழே சிறிது விளக்கிக் காட்டவே இவ் வியாசம் வரையப்படுகிறது.

நம் நாட்டு மத சரித்திரத்தை வேத காலம், யாக காலம், ஆலய காலம், தீர்த்த காலம், புத்த காலம், புராண காலம், எனப் பிரிக்கலாம். இவைகளில் கடைசியான புராண காலத்தின் முற்பகுதி கழிந்த பின்னரே "சாக பட்சணம்" தொடங்குவதாகும். அப் புராண காலத்தின் முற்பகுதி வரை நம் நாட்டு மதங்கள் சகலமும் மாமிஸ போஜனத்தை அனுஷ்டித்தே வந்தன என்பதில் சந்தேகம் வேண்டுவதில்லை. இவ் வுண்மையைக் கீழே காணப்படும் விவரங்கள் நன்கு விளக்குவதாகும்.

வேத காலம்

வேத காலத்திலும் அதற்கு முந்திய காலத்திலும் இந்தியர்க ளாகிய நாம் சம்பூரண மாமிஸ பட்சணிகளாகவே யிருந்தோம்; அக் காலத்தில் நமது குடி வாழ்வும் லௌகிக மும் மிகவும் உன்னத தசையில் இருந்தது. விவசாயம் செய்தல், ஆடு மாடுகளை வளர்த்தல், போர் புரிதல் ஆகிய இவைகளே நமது முக்கிய தொழிலாக இருந்தன. பெரும் பாலும் நமது உணவுகள் சமயல் செய்யப்பட்டனவா யிருக்க வில்லை. பச்சைக் காய் கறிகளும், மாமிஸங்களும் நமது முக்கிய உணவா யிருந்தன. நமது நாடு மட்டுமன்று உலகம் முழுவதும் இப்படியே யிருந்து வந்தன. இவ் வுணவுகளால் நம்மவர்களின் தேக பலமும் மனோ பலமும் தொழில் திறமை யும் போர் வல்லமையும் மிகவும் திடமுள்ளனவாக விருந்தன. இந் நிலை வேத காலத்திற்குச் சிறிது முந்திய காலத்த தாகும். வரவர நமது வினைகள் அனுபோகத்தாலும் பழக்க வழக்கத்தாலும் சிறிது மாறத் தொடங்கின. எனினும் மாமிஸங்களைப் பச்சையாகத் தின்பதற்குப் பதிலாகச் சுட் டும் பொசுக்கியும், சமைத்தும் உண்டு வந்தோம். இக் காரணத்தால் உருசியும், வேறு பாடுகளும் அதிகப்பட்டுக் கேவலம் ஆடு மாடுகள், மான், குதிரை இவைகளின் வகை களில் நமது சமயல் அதிகப்பட்டது. உணவுக்காகக் கொலை செய்வது பாப காரியமாக நம்மவர்கள் மதிப்பதே யில்லை. விருந்தின் முதல் போஜன வகை நமக்கு மாமிஸமாகவே யிருந்தது. மாமிஸ மில்லாத உணவு நமக்குள் இருந்ததே யில்லை.

இவ் வழக்கங்கள் வரவரப் பின் காலத்தில் கடவுள் வழி பாட்டிலும் பூஜைகளிலும் தெய்வ அற்பணத்தாலும்

பிதுர் திருப்தியிலும் நாம் உபயோகப்படுத்தி வந்தோம். தெய்வத்தையும், பிதுர்க்களையும், விருந்தாளிகளையும் மாமிஸமின்றி நாம் உபசரிப்பதே யில்லை. அவர்களும் ஒப்புக்கொள்வதே யில்லை. தேவேந்திரன். வசுக்கள், திக்பாலகர்கள் இவர்கள் வேத மந்திரங்களை விரும்புவதைவிட படைக்கும் மாமிஸ வகைகளையே அதிகமாக விரும்பி யிருந்தார்கள். இவ் வுண்மைகளை நமது வேதங்களும் உபநிஷத்துக்களும் நன்கு விளக்குகின்றன.

இந்த நிலையில் இந்தியர்கள் தங்கள் நாட்டிலுள்ள சமீபமாகக் கிடைக்கக்கூடிய காட்டு மிருகங்களை யெல்லாம் அழித்துவிட்டார்கள். இனி காட்டுக்குள் நுழைந்து மிருகங்களை வேட்டையாடிப் பிடித்தா லொழியப் போஜனத்திற்கு மிருகங்களும் மீன் முதலியவைகளும் கிடைப்பது கஷ்டமாகி விட்டது. எல்லோராலும் இவ் வேட்டைகள் சாத்தியமற்றதாகி விட்டதால் வல்லமையுள்ள மனிதர்களே காட்டுக்குள் சென்று வேட்டையாடி மிருகங்களைப் பிடிக்கத் தகுதியுள்ளவர்க ளானார்கள். அவ்வாறு பல முள்ளவர்களால் வேட்டையாடிக்கொண்டு வந்த மிருகங்களை விலை கொடுத்து வாங்கியும், ஊழியத்திற்கு அமைத்தவர்களால் பெற்றும் பல ஹீனர்களும் பெண்களும், படித்த வகுப்பாரும் உணவாக உண்டு வந்தனர். அரசாக்கினையாலும், செல்வச் செருக்கினாலும் உணவுக் குதவும் மிருகங்களை ஏராளமாக ஜனங்கள் வளர்த்து வந்தார்கள்.

படித்த வகுப்பார் இந்த இனிய மாமிஸ உணவுகளை மந்திரங்கள் கூறி அறுத்து அக்கினியிலிட்டு உண்டு வந்தார்கள். இங்கிருந்தே யாக காலம் தொடங்கிற்று.

யாக காலம்

யாக காலத்தில் மாமிஸ உணவு நாட்டில் மிகவும் பரவத் தொடங்கிற்று. ஏனெனில் இக் காலத்தில் மாமிஸத்தை உண்பதும், தேவர்களுக்கும், பிதுர்க்களுக்கும், அதிதிகளுக்கும், பந்துக்களுக்கும் படைப்பதும் மிகவும் புண்ணியமாகக் கருதப்பட்டது. அரசர்களும், பிராமணர்களும், பலமுள்ளவர்களும், யுத்தங்கள் செய்து உயிர்வதையையும், இரத்த வெற்றியையும், மாமிஸ உணவையும் ஆதரிப்பதில் பக்தியும் சிரத்தையும் உள்ளவர்களா யிருந்தார்கள். அக்காலத்தில் திருஷ்டி தோஷமும், பந்தி பேதமும் கிடையாது.

14

சகலரும் ஒன்று யிருந்து சகல உணவுகளையும் ஆனந்தமாக உண்பார்கள். மாமிஸ உண வருந்ாதவன் ஒருவனுமே நாட்டிலிருந்ததில்லை. ஆகவே ஜாதிபேதமும் இல்லையென்றே கூறலாம். இத்தகைய யாக காலமானது வாவர மாமிஸ உண வுக்காகவே வளர்ந்து பரவி வந்தது. இக் காலத்தில்தான் முற்பகுதியில் இராமாயணமும் பிற்பகுதியில் மஹா பாரத மும் நடந்த காலங்களாகும். மஹாபாரத காலத்திற்குப் பின் னும் யாக காலம் வளர்ந்தே வந்தது. இக் காலத்தின். கடைசி பாகத்திலிருந்து ஆலய காலம் ஆரம்பிக்கிறது.

ஆலயகாலம் அல்லது சனாதன காலம்

பின்தொடர்ந்து யாக காலத்தோடு அபிவிருத்தி பெற்ற தான ஆலய காலம் அல்லது சனாதன காலத்திலும் உயிர்ப் பலியும் மாமிஸ உணவும் பெருகியே வந்தது. ஆலயங்களைக் கட்டத் தொடங்கும்போதும் கட்டின பின்னரும் விக்கிரகங் களுக்கும் அவ் விக்கிரக தேவதைகளின் அதி தேவதை களுக்கும் உயிர்ப் பலி கொடுக்காமல் நம்மவர்கள் யாதொரு காரியத்தையும் செய்வதில்லை.

ஆலயகாலத் தொடக்கத்தில் சூரியன், அக்கினி, வரு ணன், அஷ்டவசுக்கள், அஷ்டதிக்பாலர்கள் முதலிய தேவர் களுக்கும் அவர்களின் தேவதைகளுக்கும் ஆலயங்கள் அமைக்கப்பட்டன. இத் தேவதைகள் உயிர் வதையில் பிரிய முள்ளனவாகக் கருதப்பட்டு வந்தன. ஒரு பக்கத்தில் யாகங்கள் செய்து உயிர்களைக் கொலை செய்வதும் மற்றொரு பக்கத்தில் ஆலயங்களில் தேவர்களுக்கும் தேவதைகளுக்கும் உயிர்வதை செய்வதும் பரபரப்புடன் நடந்து வந்ததை நமது வேதங்கள் இன்னும் ஓல மிடுகின்றன. மாமிச முண் ணாத இருடியும் பிராமண குருவும் அக் காலத்தில் நாட்டில் இருந்ததில்லை. முக்கியமாகக் குதிரை மாமிஸமும் எருமை மாமிஸமும், முயல் மாமிஸமும் சிலாக்கியமாக மதிக்கப்பட்டு வந்தன. நாயின் மாமிஸத்தை நமது மூதாதைகள் அதிகப் பிரியமாக தின்று வந்ததாகவும் மான் மாமிஸம் பெண் களுக்கு அதிகப் பிரியமென்றும் தெரியவருகிறது.

இந்த நிலை பகவான் புத்தர் பிறப்பதற்கு சுமார் ஐந்நூறு வருஷங்கள் வரையில் இருந்ததாகத் தெரிகிறது.

சைவமும் வைணவமும்

சைவமும், வைணவமும் புத்தர் காலத்திற்கு ஐந்நூறு வருஷங்களுக்கு முன்புதான் இந்தியாவில் நுழைந்து இந்து மதத்துடன் கலந்ததாகத் தெரிகிறது. இம் மதங்களும் உயிர் வதையையும் மாமிஸ உணவுகளையும் தமக்குக் கிரியைகளாகக் கொண்டிருந்ததாகவே தெரிகிறது.

இக்காலத்தில் "சைவம்" என்ற பதத்திற்கு மாமிஸ உணவற்ற மரக்கறி யுணவென்று சிலர் விநோத அர்த்தம் செய்கின்றனர். இது முழுவதும் பொய்யும் தப்பிலக்கியமும் ஆகும் "சைவம்' என்ற மொழிக்கு "சிவபரமான" என்பதே சரியான பொருளாகும். மரக்கறி யுணவிற்கும் சைவ மதத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை யென்பதை விவேகிகள் நன்கறிவார்கள். "வைஷ்ணவம்" என்ற பதத்திற்கு மாமிஸ போஜன மற்ற மரக்கறி யுணவை யுடைய மதம் என்று அநேகர் வலித்துப் பொருள் படுத்துகிறார்கள். இது சிறிதும் பொருந்தாது. "வைஷ்ணவம்" என்றால் விஷ்ணுமதம் என்றே பொருள்படுவதை வட தென் மொழிகளை நன்கறிந்தவர்கள் அறிவார்கள். இம் மதத்திற்கும் மரக்கறி உணவிற்கும் ராமானுஜர் காலம்வரை யாதொரு ஸ்தானப் பிராப்தியும் இருந்ததில்லை யென்று சரித்திர ஆதாரங்கள் முறை யிடுகின்றன. ஆகவே இனி இந்தச் சைவ, வைணவ மதங்கள் மரக்கறிக் கோட்டை மீதா அன்றி மாமிஸ உணவுக் கோட்டை மீதா கட்டப்பட் டிருந்தன என்பதை ஆராய்வோம். (தொடரும்)

பாலிய விதவைகள்

மகாத்மா காந்தி 'பால இந்தியா'வில் பாலிய விதவைகள் விஷயமாக சமீபத்தில் எழுதியுள்ள வியாசம் பின்வருமாறு :—

தீண்டாதவர்கள் மட்டும் நமது ஜன சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்கள் என்று நினைத்து விடவேண்டாம்.

பால்ய இந்து விதவைகளையும் ஒடுக்கப்பட்டவர் இனத்திலேயே சேர்க்க வேண்டும். வங்காளத்திலிருந்து ஒரு நிருபர் எனக்கு எழுதியுள்ள கடிதத்தில் பின் வருமாறு தெரிவித்திருக்கிறார் :—

***

"விதவைகளின் புனர் விவாகம் சம்பந்தமாய் முஸ்லீம்களுக்குள் எவ்வித தடையும் இல்லை. ஆனால் ஒருவர் நாலு மனைவிகள் வரையில் விவாகம் செய்துகொள்ள இடமிருக்கிறது. பல முஸ்லீம்கள் ஒன்றுக்கு அதிகமான மனைவிகளை உண்மையில் உடைத்தாயிருக்கிறார்கள். எனவே முஸ்லீம்களில் ஆண்மக்கள் விவாக மாகாமலிருப்பதில்லை. விதவைகள் விவாகம் செய்து கொள்ளக் கூடாதென்றிருந்தால் ஆண்களை விடப் பெண்கள் தொகை அதிகமாகி விடுமல்லவா? அதோடு, விதவா விவாகத்தை அனுமதிக்கும் சமூகங்களில் ஒன்றுக் கதிகமான மனைவிகளை மணக்கவும் வசதியாயிருக்க வேண்டு மல்லவா ?

***

ஹிந்து சமூகத்திலும் விதவைகள் மறு மணம் செய்து கொள்ளலாமென்று வந்தால் பால்ய விதவைகள் இளம் பருவ முள்ளவர்களை மணப்பது சாத்தியமாகி விடாதா? விவாக மாகாத பெண்களுக்குக் கணவர் தேடும் கஷ்டமும் நீங்காதா? ஒன்றுக்கு அதிகமான மனைவிகளை ஹிந்துக்கள் ஏக காலத்தில் மனைவிகளாக வைத்திருக்க இடமில்லாவிடில், விதவைகள் செய்வதாகச் சொல்லப்படும் பாவங்களை விவாக மாகாத பெண்கள் செய்ய மாட்டார்களா? விதவா விவாகத்தை ஆதரிக்கிறவர்கள் பதிவிரதா தர்மத்தைப் பற்றியும் உத்தமமான கிரஹஸ்த வாழ்க்கையைப் பற்றியும், சிந்தனை செய்வதே அனாவசியமா?" என்று கேட்கிறார். விதவைகள் மறு விவாகம் செய்துகொள்ளக் கூடாதென்று இந்நிருபர் ஊக்கத்துடன் வாதிக்கிறார். ஆனால் பல உண்மைகளை அவர் இன்னும் அறிந்துகொள்ளவில்லை. முஸல்மான்கள் ஒன்றுக் கதிகமான மனைவிகளை மணந்துகொள்ள உரிமைபெற்றிருக்கின்றனர். ஆயினும் பெரும்பாலான முஸ்லீம்களுக்கு ஒரு மனைவிதான் உண்டு. பல மனைவிகளை மணக்கக் கூடாதென்று ஹிந்து மதம் தடுத்திருக்கவில்லையென்று நிருபருக்குத் தெரியாது போலும். சில பெரிய இடத்து

ஹிந்துக்கள் ஒன்றுக்கு அதிகமான மனைவிகளை மணந்திருப்பதை நாம் அறிவோம். சிற்றரசர்கள் கணக்கில்லாத மனைவிகளை மணக்கிறார்கள். உயர்தர வகுப்பினரென்று சொல்லப்படும் வகுப்புகளில் மட்டும் விதவா விவாகம் தடுக்கப்பட்டிருக்கிறது. நான்காவது வருணத்தாரில் விதவைகள் தாராளமாக மறுமணம் புரிந்துகொண்டு தான் இருக்கிறார்கள். அதனால் ஒன்றும் விபரீதம் விளைந்துவிடவில்லை. அதே இனத்தார் ஒன்றுக் கதிகமான மனைவிகளை மணப்பதை யாரும் தடை செய்யவில்லையாயினும் ஒன்றுக் கதிகமான மனைவிகளை மணப்பதில்லை.

***

பால்ய விதவைகளுக்கு மறு விவாகம் செய்வதென்று வந்தால் விவாக மாகாத பெண்களுக்குப் புருஷன் அகப்படாமற் போய்விடுமென்று நிருபர் பயப்படுவது அறியாமை யாகும். சிறு பெண்களின் கற்பு விஷயத்தில் அளவுக்கு மிஞ்சிய கவலை நிருபரிடம் காணப்படுகின்றது. அதிலிருந்தே அவருடைய மனது சுத்தமாயில்லை யென்பது விளங்கும். ஒரு சில விதவைகள் மறு விவாகம் செய்வதால், ஏராளமான பெண்களுக்கு எப்படிக் கணவனில்லாமல் போய்விடும்? அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டால் கூட பால்ய விவாகத்தின் பலனே அது. பால்ய விவாகம் கூடாதென்று தடுத்துவிட்டால் அதற்குப் பரிகாரம் ஏற்பட்டுவிடும்.

***

கிரஹஸ்த வாழ்வு, பதி விரதம் முதலியவைகளைப் பற்றி நிருபர் ஒரே அடியாக அளக்கிறார். ஆனால் இளம் பிராயமுள்ள விதவைகள் வாழும் குடும்பங்களில் மேற்படி ஸத் குணங்களைப்பற்றி அதிகமாகப் பேசாதிருப்பதே நலம்.

***

எல்லா விதவைகளும் மறுமணம் முடித்துக் கொள்ளும்படி நான் கட்டாயப்படுத்துவது போல் நினைத்துக்கொண்டு நிருபர் எழுதியிருக்கிறார். நான் அம்மாதிரி எதுவும் போதிக்கவில்லை. 15-வயதுக்குட்பட்ட விதவைகளைப் பற்றியே போன வாரம் சில புள்ளி விவரங்களை ஆதாரமாகக் காட்டி எழுதியிருந்தேன். 15-வயது கூட ஆகாத விதவைகளுக்குப் பதிவிரதை யென்றால் என்ன புரியும்? அந்த

தர்மத்தைப் பற்றி அவர்களுக்கு ஒன்றுந் தெரியாது. காதல் இன்னதென்று அவர்கள் அறியமாட்டார்கள். 15-வயதுக்குட்பட்ட விதவைகளை விதவைகள் என்று கூடச் சொல்லக்கூடாது. அவர்களை உண்மையில் விவாகமாகாதவர்களின் ஜாப்தாவிலேயே சேர்த்து எண்ணவேண்டும். விவாகம் ஒரு சமஸ்காரமாகக் கருதப்பட விரும்பினால், விவாகத்தின் மூலமாக ஒரு புதிய வாழ்வு நம் பெண்களுக்கு ஏற்பட வேண்டுமென்று உத்தேசித்தால் பெண்களுக்குத் தக்க வயது வந்தபின்னரே விவாகம் செய்து வைக்க வேண்டும். உயிர்த் தோழர்களைத் தேர்ந்தெடுப்பதில் அப் பெண்களும் கலந்து கொள்ளவேண்டும். தாங்கள் செய்யும் காரியம் இப்படிப்பட்டது, அதன் பலன் இன்னவாகும் என்று அப்பெண்கள் அறிந்திருக்க வேண்டும். இளங் குழந்தைகளுக்குத் தாலி கட்டிவிட்டு அதை விவாகம் என்று அழைப்பதும்; புருஷனென்று சொல்லப்படுகிற குழந்தை இறந்துபோன பின் அப் பெண் குழந்தைகளை விதவையென்று தீர்மானிப்பதும் தெய்வத்துக் கடுக்காது.

***

உண்மையான ஹிந்து விதவைகளை ஒரு செல்வமாக நான் கருதுவேன். ஹிந்து மதத்தின் மூலமாக மனித வர்க்கத்துக்குக் கிடைத்த பெரிய வரமாக அதைக் கருதுவேன். ராமாபாய் ரானடே அப்படிப் பட்டவர்களில் ஒருவர். ஆனால், சிறு பெண் விதவைகளை வைத்துக் கொண்டிருப்பது ஹிந்து சமூகத்துக்கு அவமானம்.

உண்மை நட்பு.

ருடால்ப் வாலெண்டிநோ என்பவர் பேர்போன சினிமா நடிகர். அவர் சமீபத்தில் அமெரிக்காவில் இறந்து போனதையொட்டி சினிமா உலகம் முழுமையும் பெரிய துக்கம் ஏற்பட் டிருக்கிறது. பெகி ஸ்காட் என்ற நாடக மாது அவர் இறந்துபோன செய்தி கேட்டு லண்டனில் தற்கொலை செய்துகொண்டு இறந்து போனாள். வாலெண்டிநோவும், பெகியும் பெரிய நண்பர்களாம்.

இன்பமும் துன்பமே

(ஒரு சிறு கதை)

(பண்டித, எஸ். முத்துசுவாமிப் பிள்ளை எழுதியது.)

"அம்புஜா! குடி கெட்டது, இதோ பார் பாழும் கடிதத்தை! எனக்குப் பேச நா வெழவில்லை."

ஸ்ரீ ராமபிரானது மகுடாபிஷேகத்தை எண்ணி, மகிழ்வுற்றிருந்த கோசலையைப்போல், தன் புத்திரியின் விவாகத்தை நினைந்து களிப்புற்று மனோராஜ்யம் செய்துகொண்டு சோபாவில் கிடந்த அம்புஜத்துக்குத் தன் கணவனது மொழி பழுக்கச் சுட்ட நாராசம்போல் காதில் விழ ஒரே பாய்ச்சலாய் எழுந்து கடிதத்தைக் கைப்பற்றி வாசிக்கலானாள்.

கணவர் நடேச பிள்ளை சோபா வண்டை கிடந்த ஒரு சாய்வு நாற்காலியில் போதமற்று விழுந்தார்.

அம்புஜம் வாசித்த கடிதம் பின் வருமாறு:

"அன்பார்ந்த ஐயா! அநேக கோடி நமஸ்காரம். இந்தக் கடிதம் தங்களுக்கு இடி விழுந்தாற்போல் இருக்கும். என்ன செய்யலாம்? எழுதாமல் எத்தனை நாள் கழிப்பது? என் அம்மா கலியாண விஷயத்தில் பிடிவாதமாகத் தடைசெய்கிறாள். அப்பாவும் இயன்றமட்டும் சொல்லிப் பார்த்தார்; கெஞ்சிப் பார்த்தார். காரியம் மிஞ்சிப்போய் விட்டது. அவள் தமையன் மகளையே எனக்கு விவாகம் செய்ய உறுதியாய்விட்டது. கலியாண தினத்தில் நான் மணமகனாவேனோ பிண மகனாவேனோ என்று ஈசனே அறிவார். கோகிலத்துக்கு எவ்வாறு ஆறுதல் சொல்வீர்களோ அறியேன். என் வாழ் நாளின் சுவை குன்றி விட்டது. கடவுளே தஞ்சம்."

முத்துரங்கம்

கடிதத்தை வாசிக்க வாசிக்க அம்புஜத்தின் கண் பஞ்சடைந்தது; அவளும் மயங்கித் தரையில் விழுந்தாள்.

கணவனும் மனைவியும் இவ்வண்ணம் உயிர்ப் பிணமாய்க் கிடக்க ஒரு நங்கை அங்கு வந்து அம்புஜத்தின்

கையிலிருந்த கடிதத்தை அவசாமாய்ப் படித்துவிட்டு மின்னல்போல் மறைந்தாள்.

சில நிமிஷங்கள் செல்லவே கணவனும் மனைவியும் கண் விழித்தனர். ஒருவரை யொருவர் நோக்கிக் கண்ணீர் வடித்தனர்.

II

"ஐயா! எங்கள் வீட்டில் எலிகள் தொந்தரவு ஜாஸ்தியாக இருக்கிறது. எவ்வாறோ ஆயிரக் கணக்காகப் பெருகி மிகத் துன்பம் செய்கின்றன. அவைகளைக் கொல்வதற்குப் பாஷாணமோ வேறு ஏதேனும் நஞ்சோ வேண்டும். இதோ 5-ரூபா நோட்டு, தங்களுக்குத் தேவையுள்ளதை எடுத்துக் கொள்ளுங்கள்." என ஒரு இளம்பெண் இங்கிலீஷ் மருந்து வியாபாரியான ராகவ செட்டியாரிடம் கூறினாள்.

ராகவ செட்டியார் பணவாசை பிடித்த வியாபாரியல்லர். தன்னிடம் வருபவர்களின் தன்மையைச் செவ்வனே அறிந்த பின்னரே அவர் மருந்து விற்பது வழக்கம். வந்த பெண்ணை ஏற இறங்கப் பார்த்தார். சந்திர பிம்பம் போன்ற அவளது வதனத்தில் ஏதோ ஒரு துன்பக் கறை தோய்ந்திருப்பதை உய்த்துணர்ந்தார். அவள் ஒன்றுமறியா மழலையைப்போல் சமாளித்துப் பேசினாலும் அவளது உள்ளத்தில் ஏதேதோ சிந்தனைகள் உலாவி மறைவதாகவும் அவர் உணர்ந்தார்; பெருமூச் செறிந்தார்.

"அம்மா! இவ்வளவு இள வயதில் நஞ்சை நாடும் வண்ணம் உனக்கு என்ன துன்பம் வந்தது? ஏதோ தெரியாப் புத்தியால் ஒரு கொடிய முடிவுசெய்திருக்கிறாய். நமது பிராணன் அவ்வளவு எளிதாகப் பெறவும் இழக்கவும் கூடிய ஒரு கடைப் பண்ட மல்ல" என்றெல்லாம் செட்டியார் ஞானோபதேசம் செய்யத் தொடங்கினார்.

பெண்:—"ஐயய்யோ! ஏதோ தப்பெண்ணம்கொண்டு இவ்வாறெல்லாம பேசுகிறீர்கள். உண்மையாக நான் எலியைக் கொல்லவே பாஷாணம் கேட்கிறேன். என் வயதில் யாரர்வது சாகத் துணிவார்களா? நான் என்ன கூனா? குருடா? முடமா? நொண்டியா? நோயாளியா? வாய்க்கும் வயிற்றுக்கும் இல்லாதவளா? ஒன்றுமில்லையே.

செட்டி :—" அதனாற்றான் நானும் யோசிக்கிறேன்."

பெண் :—" ஒரு யோசனையும் வேண்டாம். நான் கேட்டதைக் கொடுங்கள், நேரம் போகிறது. அம்மா தேடிக்கொண் டிருப்பாள்."

செட்டியார் பெருமூச்செறிந்து ஒரு புட்டியை எடுத்து ஒரு வெள்ளைப் பொடியை தராசில் கொட்டித் தூக்கி ஒரு காகிதத்தில் மடக்கிப் பெண்ணிடம் கொடுத்து " அம்மா சீனியோடு கலந்து கொடுத்தால் எலிகள் சுலபமாய்ச் சாகும்" என்று கூறினார். பின்னர் 8-அணா விலைபோக பாக்கி 4-8-சில்லரையும் எண்ணிக் கொடுத்தார்.

பெண் பெற்றதே பாக்கியம் என மறைந்தாள்.

III

" அம்புஜா! மாடியில் என்ன சத்தம், யார் விம்மி விம்மி அழுவது?"

நடேச பிள்ளையும் அம்புஜமும் உற்றுக் கேட்டனர். விரைந்து இருவரும் மாடியை அடைந்தனர்.

ஹா! ஹா! என்ன கொடிய காட்சி! அவர்களது ஏக புத்திரியான கோகிலம் தன் சந்திரவதனத்தை இரு காங்களாலும், மூடி விம்மி விம்மி அழுதுகொண்டு சோபாவில் கிடக்கிறாள். வேடன் கை அம்பால் அடிபட்டு வீழ்ந்த மயிலைப்போல் சாய்ந்து கிடக்கும் அவளைக் கண்டதும் பெற்றோர் வாய்விட்டுக் கதறினர்.

" என் கண்ணே! உனக்கு என்னுற்றது? என் அழுகிறாய்?" என்றாள் அம்புஜம்.

" கோகிலா! இது என்ன கூத்து?" என்றார் தந்தையார்.

" அம்மா! அப்பா! என்னை மன்னியுங்கள். அன்று வந்த பாழுங் கடிதத்தை நான் வாசித்துப் பார்த்தேன். என்னை மணஞ்செய்யாமல் அவர் உயிர் தரித்திரார். அவர் இறக்க நான் இருந்து என்ன பயன்! இன்னும் சில நிமிஷங்களில் என் துன்பங்கள் யாவும் நீங்கும். இறைவனடி சேர்ந்து இன்ப வாழ் வடைவேன். என் அபராதத்துக்கு மன்னியுங்கள்! மன்னியுங்கள்!!" எனக் கூறிக் கைகூப்பினாள் கோகிலம்.

"கோகிலா! நீ சொல்வது ஒன்றும் விளங்கவில்லையே. என்ன சாகசஞ் செய்தாய்? சொல்லு! சொல்லு!! கண்ணே, எங்களை வருத்தாதே! வருத்தாதே!!" எனக் கெஞ்சினார் நடேச பிள்ளை.

அம்புஜம் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு தரையில் உருள லானாள்.

"அப்பா! நான் சாகசம் ஒன்றும் செய்யவில்லை. உங்களை வருத்தவு மில்லை. பிள்ளை பிறப்பது பெற்றோரை வருத்தவா? என் துன்பங்கள் தீர நான் வழி தேடிக் கொண்டேன். கருணாகரக் கடவுள் உலகத்தில் துன்பங் களையும் நிறைத்து அவைகளைப் போக்க அநேக உபாயங்களை யும் தந்துள்ளார். அவற்றுள் ஒன்றை நான் கைப்பற்றி னேன்"

"கண்ணே! என்ன உபாயம்? எவ்வாறு கைப்பற்றி னாய்? விரைந்து சொல். என் ஆவி தடுமாறுகிறது."

"அப்பா! கடைசிக் காலத்தில் உங்களை வீணே வருத் திய பாவத்தையும் நான் தேட விரும்பவில்லை. ராகவ செட்டியார் மருந்து ஷாப்பிலிருந்து பாஷாணம் வாங்கி உண்டேன்."

"பாஷாணமா? பாவி ராகவ செட்டியா கொடுத் தான்? என் குடியைக் கெடுத்தானே!"

"அப்பா! அவரைத் திட்டவேண்டாம். அவர் மிக நல்லவர்."

"ஆம், நல்லவர் தான்! நல்லவர் தான்!! இதைவிட என்ன நன்மை செய்யவேண்டும், என்ன பாஷாண மம்மா? பெயர் தெரிந்தால் மாற்றான் என்னவென்று பார்க்க லாமே."

என்று படபடத்துக் கேட்டார் தந்தையார்.

"பெயர் தெரியாது, அப்பா! ஏதோ ஒரு வெள் ளைப் பொடி" என்றாள் கோகிலம்.

நடேச பிள்ளை டெலிபோனண்டை ஓடி ராகவ செட்டி யாரைக் கூப்பிட்டார்.

செட்டியார், "யார் அழைக்கிறது? என்னவேண்டும்?"

இன்பமும் துன்பமே

"நான் தான் நடேச பிள்ளை, நேற்று என் மகளுக்குப் பாஷாணம் விற்றீர்களாமே, என்ன பாஷாணம்?

"ஓகோ! அவள் உங்கள் மகளா? பாஷாணம் கொடுக்கவில்லை. நான் அவ்வளவுக்கு முட்டாளா? அவள் சிறு பிள்ளை, தெரியாத்தனமாய் விளையாடுகிறாள் என்றெண்ணி ஈனோஸ் ப்ரூட் ஸால்டு (Enos Fruit Salt) என்னும் பழ உப்பைக் கொடுத்தேன். அது ஒரு தீமையும் செய்யாது. ஒருகால் ஒரு வேளை மலசுத்தியாகும். அவ்வளவுதான். பயப்பட வேண்டாம்" என்றார் செட்டியார்.

நடேச பிள்ளை ஆநந்தக் கூத்தாடிக்கொண்டே மகளண்டை வந்தார்.

"கண்ணே! கோகிலா! செட்டியார் நல்லவர்தான். அவர் பாஷாணம் தரவில்லை. தீங்கற்ற ஒரு பழ உப்பைத் தந்தார். ஆபத்தொன்றுமில்லை. கவலைப் படாதே" என்றார் நடேச பிள்ளை.

"ஆபத்தில்லையா? இது என்ன கொடுமை" என எழுந்தாள் கோகிலம்!

அப்பொழுது ஒரு தந்திச் சிபாய் ஒரு தந்தி கொண்டு வந்து கொடுத்தான்.

நடேச பிள்ளை வாங்கி வாசித்துப் பார்த்தார்.

"என் அம்மான் மகள் விஷந்தீண்டி இறந்துபோனாள். கோகிலத்தையே விவாகம் செய்ய உறுதியாய்விட்டது. நாளை அப்பா அவ்விடம் வருகிறார்.

முத்துரங்கம்.

"அம்மா! உன் அபீஷ்டம் நிறைவேறி விட்டது. இதோ பார் முத்துரங்கம் தந்தியை" என்று நடேச பிள்ளை தந்தியை மகள் கையில் கொடுத்தார்.

கோகிலம் தந்தியை ஒன்றுக்கு மூன்று முறை வாசித்துப் பார்த்தாள். கண் மூடினாள்.

அவள் அபீஷ்டம் நிறைவேறியது.

ஆனால், பாஷாணத்தினாலன்று, முத்துரங்கம் தந்தியால்.

முற்றும்.

"விதவா விவாக விளக்கம்"

ஸ்ரீமான் திரு. ஈ. வெ. ராமசாமி நாயகர் அவர்கள் எழுதியது.

பழுத்த ஞானமும் நீடிய அனுபவமும் கொண்ட அறிஞர் திரிசிரபுரம் திருவாளர் சி. பி. இராஜகோபால் நாயுடு அவர்கள் ஆக்கிய விதவா விவாக விளக்கம் என்னும் புத்தக அச்சுப் பிரதியை அனுப்பி எனது அபிப்பிராயத்தை எழுதுமாறு எழுதி யிருந்தார். விதவா விவாகத்தைப்பற்றி நான் தீவிரக் கருத்துக் கொண்டவனே யாகிலும் போதிய அமயமும் அவகாசமும் வாய்த்திலாமையான் அதனை ஊன்றிப் படித்து விரைவில் எனது கருத்தினை வெளி யிட இயலாது போயிற்று. பிறகு அப் புத்தகம் முடிவு பெற்று புத்தக ரூபமாய்க் கிடைக்கப் பெற்றேன். அதனை அமைதி யுடன் படித்து எனக்குத் தோன்றிய சில கருத்துக்களை எழுத முற்பட்டேன்.

இந்திய நாட்டின் ஆளுகை உரிமை இந்தியருக்கே கிடைக்க வேண்டுமென அரசியல் சீர் திருத்தக்காரர்களும், இந்திய மக்களுக் குள்ளிருக்கும் வகுப்புப் பிரிவினையும் ஜாதி வேற்றுமையும் தொலைய வேண்டுமென்பதாக சமூக சீர்திருத்தக்காரர்களும் போராடுகிறார்களே யன்றிப் பெண் மக்களுள் ஒரு பகுதியார் அழிந்து வருவதைப் பராமுக மாகவே பார்த்து வருகின்றனர். (இயற்கை தேவியார்) சிருஷ்டிக் கர்த்தா, மக்கட் படைப்பி லடங்கிய ஆண் பெண் களை எற்றத் தாழ்வுடன் படைக்கவில்லை என்பதை அறி வுடைய உலகம் எற்கும். அங்க அமைப்பி லன்றி அறிவின் பெருக்கிலோ வீரத்தின் மாண்பிலோ ஆண் பெண்களுக்குள் எற்றத் தாழ்வான வித்தியாசம் காண இயலுமோ? இயலவே இயலாது. ஆடவரினும் சரி, பெண்டிரினும் சரி, முறையே அறிவாளிகளும் ஆண்மை யுடையோரும், அறிவிலிகளும் பேடிகளும் உண்டு. இவ்வா றிருக்கத் திமிர் படைத்த இந்த ஆண் உலகம் சாந்த குண பூஷணமான பெண் ணுலகைத் தாழ்த்தி அடிமைப்படுத்தி வருதல் முறை யும் தர்மமுமான செய லாகாது.

ஹிந்து மத ஆண் உலகம் தனது பெண் உலகத் தின் மாட்டுப் பூண்டொழுகும் கொடுமைச் செயல்கள்

பலவற்றில் இங்கு நாம் விதவைகளைப் பற்றி மட்டும் கவனிக்க வேண்டியுளது.

உலக இன்பத்தை நுகர்ந்து அலுத்துப் போயிருக்கும் பழுத்த கிழவனேயாயினும், தன் மனைவியார் இறந்துபட்டவுடன் மறுமணம் புரிய முயலுகின்றான். அதுவும் வனப்பு மிகுந்த--எழில் பொருந்திய இளஞ் சகோதரிகளையே தன் மணத்திற்குத் தேர்ந் தெடுக்கின்றான். ஆயின் ஓர் பெண்மகள் தன் கொழுநனை இழந்து விட்டால், அவள் உலக இன்பத்தையே சுவைத் தறியாதவளா யிருப்பினும்-தன் ஆயுட்கால முற்றும், அந்தோ! தன் இயற்கைக் கட்புலனை இறுக மூடி, மனம் நொந்து, வருந்தி மடிய நிபந்தனை ஏற்பட்டு விடுகிறது. என்னே! அநியாயம்!

ஹிந்து சகோதரர்கள் இவ்வாறு தங்கள் சமூகம் அநியாயமாய் அழிந்து வருவதைப் பார்த்துக்கொண்டு வருவது பெரும் பாபகரமான செயலாகும்.

முன் நாளில் தன் கணவனைப் பறிகொடுத்த மனைவியும் உடன் கட்டையேறுதல் வழக்கமாயிருந்தது. இக்கொடிய வழக்கத்தை அக்காலத்தில் ஆங்கிலோ இந்திய வியாபாரக் கூட்டத்தின் தலைவராயிருந்த ஹேஸ்டிங்ஸம், சுவாமி தயானந்த சரஸ்வதி, ராஜா ராம் மோகன் ராய் போன்ற இந்திய நாட்டு அறிவாளிகளும் எடுத்துக்கொண்ட பெரு முயற்சியால் நிறுத்தப்பட்டது. உடன்கட்டை யேறுதலை நிறுத்துதற்காகப் போராடிய அக்காலத்திலும் ஆசாரமே அழிந்து போவதாகவும் மதமே கெட்டுப் போவதாகவும் பெருங் கிளர்ச்சி ஏற்பட்டது. ஆனால் நாளடைவில் அக் கூக்குரலும் அடங்கி, 'ஸககமனம்' என்னும் உடன்கட்டை யேறுதலான கொலை வழக்கமும் அறவே மறைந்தது.

இது போழ்து நம் நாட்டில் விதவைகள் மறுமணம் செய்து கொள்ள லாகாதென்னும் வழக்கமிருப்பது பாரபட்சம் நிரம்பிய கொடுமையான செய லாகும். தன் மனைவியை இழந்த கிழவன் மறுமணம் செய்து கொள்ளலாமென்றும் தன் கணவனை இழந்த மகப்பேறு பெறாத இளமங்கை மறுமணம் செய்து கொள்ள லாகாதென்றும் கூறுவது நடு நிலைமை கொண்ட அறச் செய லாகுமா?

விதவைகள் மறு மணம் செய்து கொள்ளும் வழக்கம் கற்புக்குப் பங்கம் விளைப்பதாகும் எனக் கூறினால் அது

பொருந்தாது. விதவைகளை மறுமணம் செய்விக்கா திருத்தலினாலேயே அவர்கள் கற்பழிந்து மாய்கின்றனர். காமச் சுவை கருதும் இளங்கைம்பெண்கள் பல படிற்றொழுக்கத்தில் வீழ்ந்து, அதனால் கருப்பந் தரித்து இரண்டோர் திங்களுள் சிசுஹத்தி தோஷத்திற்கு உள்ளாகின்றார்கள். இப்பாவம் யாரைச் சாரும்? விதவைகளை மறுமணம் செய்து கொள்ளல் ஆகாதென்று கட்டாயப் படுத்திவரும் பெற்றோர்களையே சாரும். மறுமணம் விரும்பாத பெண்களைத் தவிர்த்து ஏனைய கைம்பெண்களுக்கு மறுமணம் செய்வித்தலே நன்று.

விதவைகளின் கலியாணத்தைப் பற்றி இவ்வாறு எழுதும் நான் எழுத்தளவோடும் சொல்லளவோடும் ஆதரிக்கின்றேனா, அன்றிச் செய்கையிலும் ஆதரித்துள்ளேனா என்ற ஐயம் அன்பர்களுக்குத் தோன்றலாம். இதன் பொருட்டேனும் எனது கருத்தைப் பிரதிபலிக்கும் செய்கையைக் கூற விரும்புகிறேன்.

நான் கர்நாடக பலிஜவார் வகுப்பைச் சேர்ந்தவன். எனது வகுப்பில் பெண் மக்கள் முக்காடுடன் கோஷாவாக இருக்க வேண்டியவர்களெனவும் விதவா விவாகத்தை அனுமதிக்கப்படாத வகுப்பினரெனவும் வழங்கப்படுபவர்கள். நான் பிறந்த குடும்பமோ அளவுக்கு மிஞ்சிய ஆசாரத்தையும் வைணவ சம்பிரதாயத்தையும் கடுமையாய் ஆதரிக்கும் குடும்பம். இப்படி இருந்தபோதிலும் என்னுடைய 7-வது வயதிலிருந்தே மக்களில் உயர்வு தாழ்வு கற்பித்தலையும் ஒருவர் தொட்டதை மற்றொருவர் சாப்பிடலாகாதெனச் சொல்வதையும் நான் பரிகாசம் செய்து வந்ததோடு யாவரையும் தொடுவதற்கும் எவர் தொட்டதையும் சாப்பிடுவதற்கும் நான் சிறிதும் பின் வாங்கியதே கிடையாது. என்னை,இளம்போதிலிருந்தே எங்கள் வீட்டுச்சமையலறைக்குள் செல்ல அனுமதிப்பதில்லை. நான் தொட்ட செம்பை, எனது தகப்பனார் தவிர, மற்றையோர் சுத்தம் செய்யாமல் உபயோகப்படுத்த மாட்டார்கள். எங்கள் குடும்ப ஆசார அனுஷ்டானங்களைப் பார்த்து பொறாமைப் படுபவர்கள் என்னைப் பார்த்து சாந்தியடைந்து விடுவார்கள். "நாயக்கருக்கு அவர்கள் ஆசாரத்திற் கேற்றாற் போல் தான் ஒரு பிள்ளை என்றாலும், பிள்ளை நவமணியாய்ப்

பிறந்திருக்கிறது'' என்று சொல்லுவார்கள். என்னுடைய 16-வது வயதிலேயே பெண்மக்களைத் தனித்த முறையில் பழக்குவதும் அவர்களுக்கெனச் சில கட்டுத் திட்டங்களை ஏற்பாடு செய்வதையும் ஆண் மக்களின் அகம்பாவம் என்று நினைத்து வந்தேன்.

இவ்வாறாக, என் தங்கை தனது இளம் வயதிலேயே ஒரு பெண் குழந்தையையும் ஓர் ஆண் குழந்தையையும் விடுத்து விண்ணுற்றாள். அவற்றுள் 'அம்மாயி' என்றழைக்கப் பெறும் அப் பெண் குழந்தைக்கு அதன் 10-வது வயதில் சிறந்த செல்வாக்கோடு ஒரு செல்லக் கலியாணம் செய்து வைத்தோம். கலியாணம் செய்த 60-ம் நாள் அப்பெண்ணின் கணவன் என்னும் 13-வயதுள்ள சிறு பையன் பகல் 2-மணிக்கு விஷபேதியால் விண்ணுற்றான். அவன் இறந்தான் என்ற செய்தியைக் கேட்டதும் அப்பெண் குழந்தை என்னிடம் ஓடி வந்து ''மாமா! எனக்குக் கலியாணம் செய்துவை என்று நான் உன்னைக் கேட்டேனா? இப்படி என் தலையில் கல்லைப் போட்டாயே'' என்று ஓவென்று அலறிய சத்தத்தோடு என் காலடியில், மண்டையில் காயமுண்டாகும்படி, திடீரென்று விழுந்தது. துக்கம் விசாரிப்பதற்காக அங்கு வந்திருந்த ஆண் பெண் உள்பட சுமார் 600, 700, பேர்கள் அக் குழந்தையையும் என்னையும் பார்த்த வண்ணமாய்க் கண்களிலிருந்து தாரை தாரையாய் நீர் வடித்தனர். எனக்கும் அடக்கவொண்ணா அழுகை வந்துவிட்டது. ஆனால் கீழே கிடந்த அந்தக் குழந்தையை நான் கையைப் பிடித்துத் தூக்கும்போதே அதற்கு மறுபடியும் கலியாணம் செய்து விடுவது என்ற உறுதியுடனேயே தூக்கினேன்.

பிறகு அந்தப் பெண் பக்குவமடைந்த ஒரு வருடத்திற்குப் பின் அதற்குக் கலியாணம் செய்ய நானும் எனது மைத்துனரும் முயற்சி செய்தோம். இச்செய்தி எனது பெற்றோருக்கும் மற்றோருக்கும் எட்டவே அவர்கள் இதைத் தங்கள் வகுப்புக்கு ஒரு பெரிய ஆபத்து வந்துவிட்டது போலக் கருதிப் பெரிதும் கவலைக்குள்ளானவர்களாகி நாங்கள் பார்த்துவைத்த இரண்டொரு மாப்பிள்ளைகளையும் கலைத்தார்கள். முடிவில் எனது மைத்துனரின் இரண்டாந்தாம் மைத்துனரைப் பிடித்துச் சரிசெய்து, எவரும் அறியா வண்

ணம் பெண்ணையும் மாப்பிள்ளையையும் சிதம்பரத்திற் கழைத்துச் சென்று அங்கு கோயிலில் கலியாணம் செய்வித்து ஊருக்குக் கூட்டிவந்தனர். ஆனல் நான் அங்கு போகாமல் ஊரிலேயே இருக்க வேண்டிய தாயிற்று. ஏனெனில், நான் போயுள்ள செய்தியைச் சுற்றத்தார் அறிந்தால் ஏதாவது, மாப்பிள்ளையைத் தடைசெய்து விடுவார்களோ என்கிற பயத்தால், நான் ஊரி லிருந்தால் கலியாணத்திற்காக வெளியூருக்குப் போயிருக்கிறார்களெனச் சந்தேக மிருக்காது என்கிற எண்ணங்கொண்டே யாகும். இக் கலியாணத்தின் பலனுக இரண்டு மூன்று வருட காலம் பந்துக்களுக்குள் வேற்றுமையும் பிளவும் ஏற்பட்டு ஜாதிக் கட்டுப்பாடு இருந்து பிறகு அனைத்தும் சரிப்பட்டுப் போயின.

பெண்ணும் மாப்பிள்ளையும் ஒத்து வாழ்ந்து ஓர் ஆண் மகவைப் பெற்றனர். ஆனல் துரதிர்ஷ்ட வசமாகக் கொஞ்ச நாளையில் அந்த இரண்டாவது புருஷனும் இறந்துவிட்டான். இப்பொழுது தாயும் மகனுமே க்ஷேமமா யிருக்கிறார்கள். இன்னமும் எனது வகுப்பில் 13 வயதுக்குக் கீழ்பட்ட விதவைக் குழந்தைகள் சிலர் இருக்கின்றனர். பாவம், அக் குழந்தைகளை அவர்களின் பெற்றோர்கள் தீண்டாதார் போல் கருதி நடத்துவதைத் தினமும் பார்க்க பாபமா யிருக்கிறது.

எவ்வளவோ இடருக்குள் அகப்பட்டு அக் கலியாணத்தை முடித்து வைத்தோம். ஆனல் கடைசியில் அந்த இரண்டாவது கணவனும் மரிக்கவே விதவா விவாக விஷயத்தில் தீவிரமாகத் தலையிட வேண்டு மென எனக்கிருந்த கருத்துக்குப் பெரிய முட்டுக்கட்டை போட்டது போலாயிற்று.

விதவைகளின் விஷயம் நினைவிற்கு வரும்போதும், நேரில் காண நேரும்போதும், உலக இயற்கை எளியாரை வலியார் அடக்கி ஆண்டு ஹிம்சிப்பதல்லாமல் வேறல்ல வென்றே முடிவு செய்வேன். நமது ஹிந்து சமூகம் எந்தக் காலத்தில் எவருடைய ஆதிக்கத்தில் கட்டப்பட்டதோ, அன்று மத மில்லாமல் முறை யில்லாம லிருந்து இயற்கையாகவே ஏதாவது கட்டுப்பாடுகள் ஏற்பட்டு அவற்றை வலியவர்கள் தங்கள் தங்கள் சுயநலத்திற்குத் தக்கபடி திருப்பிக்கொண்டார்களோ என நினைக்கும்படி இருந்தாலும் பொதுவாய் விதவைத் தன்மை நிலைத்திருக்கும் காரணத்தினுலேயே ஹிந்து மதமும் ஹிந்து சமூகமும் ஒரு

காலத்தில் அடியோடு அழிந்துபோனாலும் போகுமென் பதே எனது முடிவான கருத்து.

அரசியல் என்றும் சமுகவியல் என்றும் ஜனச்சார சீர் திருத்த வியல் என்றும் பெண் மக்கள் முன்னேற்ற மென் றும் சொல்லிக்கொண்டிருக்கும் மக்களில் பெரும்பான்மை யோர், இவற்றைத் தங்களது வாழ்வுக்கும் கீர்த்திக்கும் சுய நலத்திற்கும் உபயோகப்படுத்திக் கொள்ளுவோராக இருக் கிறார்களே தவிற, உண்மையில் அக்கருத்துக் கொண்டு உழைப்பவர்கள் அரிதினு மரிதாகி விட்டனர் என்று சொல்லுவதை மன்னிக்க வேண்டுகிறேன். அன்றியும் இவ் விதத் துறைகளிலும் சீர்திருத்தங்களிலும் பாடுபடுபவர் களாய்க் காணப்படுவோரில் பெரும்பாலோர் தாங்கள் செய் வது சரியென்ற தீர்மானம் தங்களுக்கே யல்லாமல் உலக மெய்ப்புக்கு செய்கிறவர்களாகவே இருக்கிறார்கள். பெண் மக்கள் முன்னேற்றத்தைப் பற்றிப் பேசுவோர் தங்கள் வீட் டுப் பெண்களைப் படுதாவுக்குள் வைத்துக்கொண்டும், விதவா விவாகத்தைப்பற்றிப் பேசுவோர் தங்கள் குடும்பங் களில் உள்ள விதவைகளை காவல்போட்டு விதவைத் தன் மையைக் காப்பாற்றிக்கொண்டும் இருக்கிறார்களே தவிற உண்மையில் ஒரு சிறிதும் தாங்கள் நடவடிக்கையில் காட்டுவதில்லை. இதன் காரணம் என்னவெனப் பார்க்கும் போது, பெண் மக்கள் என்று நினைக்கும்போதே அவர் கள் அடிமை, நமக் கடங்கினவர்கள், கட்டுப்படுத்தி வைக்கப் பட வேண்டியவர்கள் என்கிற உணர்ச்சி ஏற்படுகிறது என்றே நினைக்கிறோம். இதனாலேயே அவர்களை விலங்கு களைப்போல் நடத்தி வருகிறார்கள். அவர்களுக்குச் சுதந் திரம் கொடுப்பது என்கிற விஷயத்தை நினைக்கும்போது செய்யக் கூடாத ஒரு பெரிய குற்றமான செய்கையைச் செய்ய நினைக்கிறது போலவே தோன்றுகிறது. அதனால் மனித சமுகத்தில் சரி பகுதியான எண்ணிக்கைக்குப் பிறவி யிலேயே சுதந்திரம் இல்லை என்பது தானே இதன் பொருள்? ஆடவருக்குப் பெண்டிரைவிடச் சிறிது வலிமை அதிகமாக ஏற்பட்ட குற்றந்தானே இம்மாதிரி ஒரு சரி சமமான சமூகத்தை சுதந்திர மில்லாமல் அடிமைப் படுத்தும் கொடு மையை அனுஷ்டிக்க வேண்டிய தாயிற்று. இந்தத் தத்

துவமே வரிசைக் கிரமமாக மேலோங்கி எளியோரை வலி யோரால் அடிமையாகச் செய்கிறது.

உலகில் மனித வர்க்கத்திற்கு அடிமைத் தத்துவம் ஒழிய வேண்டுமானல் பெண்ணுலகை அடிமையாகக் கருதி நடத்தும் அகம்பாவமும் கொடுமையும் ஒழிய வேண்டும். இது ஒழிந்த நிலேயே சமத்துவம் சுதந்திரம் என்னும் முளே முளேக்கும் இடம்.

உலகிலேயே மிகப் பெரிய சீர்திருத்தக் காரரான மகாத்மா காந்தி இந்து விதவைகளேப் பற்றி அநேக சந்தர்ப்பங்களில் பேசியும் எழுதியும் வந்திருக்கிருர். அவற் றுள் சென்ற ஆண்டு "நவஜீவன்" பத்திரிகையில் மகாத்மா எழுதியிருக்கும் விஷயத்தைக் கவனித்தால் விதவைகளின் விடுதலே சம்பந்தமாய் மகாத்மா எவ்வளவு தூரம் உழைக் கிருர் என்பது புலனுகும். அக் கட்டுரையின் ஒரு சில பாக மாவது :—

"பால்ய விதவைகளேக் கட்டாயப் படுத்தி வைத்தி ருப்பது போன்று இயற்கைக்கு விரோதமான பொருள் உலகில் வேறென்றும் இல்லே என்பது எனது திடமான நம்பிக்கை. விதவைத் தன்மை என் பது எவ்விதத்திலும் ஒரு தர்ம மாகாது. பலாத்காரத்தி னல் அனுஷ்டிக்கச் செய்யும் எவ்விதச் செயலும் அற மாகாது. பலாத்காரத்தினல் நடத்தும் விதவை வாழ்வு பாவ மானது, பதினேந்து வயதுள்ள ஒரு பால்ய விதவை தானகவே விதவை வாழ்வைக் கொண்டிருக்கிருள் என்று சொல்லுவது, அவ்விதமா கச் சொல்லுவோரின் கொடூர சுபாவத்தையும் அறி யாமையையுமே விளக்குகிறது."

என்று எழுதிவிட்டு, விதவைகள் மறுமணம் செய்து கொள்ள வேண்டு மென்பதாகத் தன் உள்ளன்போடும் ஆவேசக் கிளர்ச்சியோடும் மகாத்மா கூறிய மணிவாசகங் களில் ஒரு சிலவற்றைக் கவனிப்போம்.

"அமைதியுடன் தங்களுடைய துக்கத்தைச் சகித்துக் கொண்டு தங்களுடைய உண்மையான கருத் தைத் தங்கள் பெற்ரோர் அல்லது போஷகர்களான ஸ்திரீ புருஷர்களிடம் தைரியமாய்ச் சொல்லிவிட

வேண்டும். அவர்கள் அதைக் கவனிக்காவிட்டால் தாங்களே, ஒரு யோக்கியமான புருஷன் கிடைத்தால் உடனே விவாகம் செய்து கொள்ளட்டும். அது வரையில் யோக்கியமான புருஷனை அடைய தமயந்தி சாவித்திரி முதலியவர்கள் போல் தவம் செய்வதே ஏற்ற வழியாகும்.........விதவைகளின் போஷகர்கள் இவற்றைச் சரிவரக் கவனியாவிடின் பின்னர் பச்சாதாபப் படுவார்கள். ஏனெனில் நான் ஒவ்வோரிடத்திலும் துராசாரமே பார்த்துக் கொண்டு வருகிறேன். விதவைகளைப் பலாத்காரமாய்த் தடுத்து விதவைத் தன்மையை அனுஷ்டிக்கச் செய்வதால் விதவைகளுக்காவது, குடும்பத்திற்காவது அல்லது விதவா தர்மத்திற்காவது மேன்மை உண்டாகவே மாட்டாது. இம் மூன்று தத்துவங்களும் நசித்து வருவதை என் கண்களினாலேயே பார்த்துக்கொண்டிருக்கிறேன். பால்ய விதவைகளே! நீங்களும் உங்களைப் பலவந்தப் படுத்தி விதவைகளாக வைத்திருக்கும் ஸ்திரீ புருஷர்களும் இதை அறிவீர்களாக" இவ்வாறாக,

1921-ம் வருடத்திய ஜனசங்கைப்படி ஹிந்துக் கைம் பெண்களின் தொகையினை நோக்குகையில், ஐயகோ! என் நெஞ்சு துடிக்கிறது!

1 வயதுள்ள விதவைகள்	597
1 முதல் 2 ,, ,,	494
2 ,, 3 ,, ,,	1,257
3 ,, 4 ,, ,,	2,837
4 ,, 5 ,, ,,	6,707
ஆக மொத்தம்.	11,892
5 ,, 10 ,, ,,	85,037
10 ,, 15 ,, ,,	232,147
15 ,, 20 ,, ,,	396,172
20 ,, 25 ,, ,,	742,820
25 ,, 30 ,, ,,	1163,720
ஆக மொத்த விதவைகள்	26,31,788

அல்லாமலும் இத்தகைய விதவைத் தன்மையானது பிரஜா உற்பத்திக்குப் பேரிடாா யிருக்கிறது. நமது ஹிந்து மதத்திலிருந்து எவரேனும் இரண்டொருவர் பிற மதத்திற்கு மாற்றப்பட்டால் நம் மக்களுக்கு எவ்வளவோ துன்பம் நேரிட்டுவிட்டதாகக் கருதி பரிதாபப்படுகிறார்கள். இதன் காரணம் நமது மதத்தினரில் இருவர் குறைந்துவிட்டதால் ஹிந்து சமுகத்திற்குக் கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டு விட்டது என்பதினாலே யன்றோ? அந்த இரண்டு நபருக்கு இவ்வளவு துக்கமும் துயரமும் ஏற்படுமானால் தற்காலம் நமது இந்திய நாட்டிலுள்ள இருபத்தாறு லட்சத்து முப்பத்தோராயிரத்து எழுநூற்று எண்பத்தெட்டு விதவைகளும் கலியாணம் செய்துகொண்டு இல்லற வாழ்க்கை நடத்துவதா யிருந்தால் எத்தனை குழந்தைகள் பெறக்கூடும்? சராசரி மொத்தத்தில் மூன்றில் இருமடங்குப் பெண்கள் 2-வருடத்திற்கு ஒரு குழந்தை வீதம் பெறுவதாக வைத்துக்கொண்டாலும் தடவை ஒன்றுக்கு 8,77,263 குழந்தைகள் வீதம் வருடம் ஒன்றுக்கு 4,38,631 பிரஜா உற்பத்தியை நாம் கெடுத்துக்கொண்டு வருகிறோம். இது, இரண்டொருவர் மத மாறுவதால் நஷ்டம் வந்துவிட்டதாகக் கருதுவோருக்குப் புலப்படுவதில்லை. பால்மண மறாத 5-வயதிற்குட்பட்ட இளங் குழந்தைகள் மட்டிலும் 11,892 பேர் இருக்கிறார்களென்பதையும் தன் பிறவிப் பயனையே நாடுதற்கில்லாது, இன்பந் துய்த்தற் கில்லாது, அடக்கிவைக்கப்பட்டிருக்கும் 10, 15-வயதிற்குட்பட்ட கைம் பெண்கள் 2,32,147-பேர் இருக்கிறார்களென்பதையும் கேட்கவே என் குலை நடுங்குகிறது. இத்தகைய படுமோசமான விதவைத் தன்மையை எந்த நாகரீக உலகம் ஏற்கும்?

விதவைகளின் கொடுமையை நீக்கி ஒரு நூறு வருடங்களாக ராஜாராம் மோகன ராய், ஈஸ்வர சந்திரா வித்யாசாகரர், கோலாப்பூர் மகாராஜா, சுரேந்திரநாத் பானர்ஜி முதலிய அறிஞர்கள் பாடுபட் டுழைத்தனர். இது போழ்தும் இத்தகைய சீர்திருத்தத் துறையில் பாஞ்சாலத் தலைவர்கள் பலர் இறங்கி உழைத்து வருகின்றனர்.

நமது நண்பர் திருசிரபுரம் திரு. சி. பி. இராஜகோபால நாயுடுகாரு விதவைகளை ரக்ஷிப்பது என்னும் பரோபகாரத் துறையில் இறங்கி, 'ஆச்சாரம்' 'வழக்கம்' என்று உளரும்

வைதீகப் பைசாசங்களின் பலமான எதிர்ப்புக் கிடையே, நுணுகிய ஆராய்ச்சியுடனும் அனுபவத்துடனும் "விதவா விவாக விளக்கம்" என்னும் புத்தகத்தை எழுதி யிருக்கிறார். இதில் நம் நாட்டு மக்களுக்குள்ள கஷ்டமும் கொடுமையும், அவர்களால் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஏற்படும் அபகீர்த்தியும், விதவைத் தன்மையைக் காப்பாற்றும் பொருட்டுப் பெரிய பெரிய இழி சொல்லையும் சகித்துக் கொண்டிருக்கும் சாதனையும், விதவைத் தன்மையைக் காப்பாற்றும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இவ்வித அபகீர்த்தி நேருகிறபடியால் இது உலக வழக்கம் என்று சமாதானப் படுத்திக்கொள்ளும் தன்மையும் எவ்வளவு தைரியமாயும் தெளிவாயும் அனுபவமாயும் தெரிவிக்கக் கூடுமோ அதற்கு மேலாகவே அனைவரும் சரி என்று ஒப்புக்கொள்ளத்தக்க வண்ணம் விவரித்து எழுதியிருக்கிறார். இப்புத்தகத்தை வாசிப்பவர்கள் எவ்வளவுதான் 'ஆச்சாரம்' 'பழக்கம்' 'வழக்கம்' என்னும் மூட நம்பிக்கையில் ஈடுபட்ட கல் நெஞ்சர்களா யிருந்தாலும் அவர்கள் மனதை இளக்கி விதவைகள்பால் கருணை காட்டும்படி செய்து விடுமாதலால், புத்தகம் உருவில் சிறியதா யிருப்பினும் உலகிற்குப் பயன்படக் கூடிய வகையி லிருப்பதால் இதைப் பெரிய நூல் என்றே கூறவேண்டும். இப்புத்தகத்தால் திரு. நாயுடுகாரு நம் நாட்டிற்குப் பெருந்தொண்டு செய்த வராகிறார். இதுபற்றி திரு. நாயுடுகாரு அவர்களுக்கு நமது நாடும், ஹிந்து மதமும் பெண்டி ருலகமும் நன்றி செலுத்தப் பெரிதும் கடமைப் பட்டுள்ளது.

ஓம்

மதிப்புரை

உடற்பயிற்சியின் உண்மை

இஃது தேகப் பயிற்சியின் அவசியத்தைத் தெள்ளிதில் விளக்கும் ஒரு அழகிய சிறு நூல், இதன் ஆசிரியர் கீழச்சவல் பட்டி, லெ. சோமசுந்தரம் ஆவர். "காயம் என்பது பொய்யடா, காற்றடைத்த பையடா" என்பது போன்ற மயக்க மொழிகளில் ஈடுபட்டு உடலை வரம்பெற வளர்க்கும் வழியறியாது சோம்பராய்ப் பிணியாளராய்ப் பேடிகளாய் அலைந்துண்ணும் நம் நாட்டினரைத் தட்டியெழுப்ப இந்நூல் பெரிதும் உதவிபுரியு மென்றே நம்புகிறோம்.

உண்மை, புகழ், பொருள்.

(திருவாளர் த. ராமகிருஷ்ணன் அவர்கள் எழுதியது.)

சத்யம் யச : ச்ரிமயி ச்ரி ச்ரயதாம் ஸ்வாஹா.

(தைத்திரிய ஆரண்யகாண்டம் X, 35.)

எமது உள்ளத்தில் உண்மை நிலவுக. யான் புகழ் படைத்திடுக. யான் ஒளியும் பொருட்பேறும் பெற்றிடுக. இவை கருதி யான் தன்னலம் அறவே களைந்திடுவேனாக.

இவ் வேண்டுகையில் மூவகைப் பேறுகள் விரும்பப் படுகின்றன. அவை உண்மை, புகழ், பொருள் என்ப. யாவற்றிலும் முதன்மையாக உண்மை காண விழைந்திடுக. உண்மை நாடி முயன்றிடுக. உண்மையில் பற்றுள்ளம் கொள்க, புகழ், பொருள் கருதாது உண்மை காத்திடுக. உண்மையின் வேறாகப் புகழும் பொருளும் விழுமிய தன்று. உண்மை நிலைபெற எவ்வகை நலனும் துறந்திடுக. உண்மை-வாய்மை-மெய்மை என்பன உடற்குறு அணிகள். உண்மை என்றும் அழியாது நின்று நிலவுவது.

உண்மை காக்குந் திறன் அடைந்த பிறகே புகழ் விரும்புதற் குரியது, புகழையும் பொருளையும் ஒப்ப நோக்கப் பொருளினும் புகழ் சிறந்தது. பொருளை மதியாது புகழின் பொருட்டே முயன்றிடுக. எனினும் புகழ் உண்மையின் உயர்ந்த தன்று. புகழ் கருதி உண்மையைத் துறத்தலாகாது. புகழினும் உண்மை விழுமியது. தன்னல மின்றிப் புகழ் விரும்பிச் சிறந்தவை யாற்றுக. புகழ் தமக்குப் பின்னும் நின்று நிலவுவது.

உண்மையும் புகழும் கைவரப் பொருள் ஈட்ட முயன்றிடுக. தீவினை யின்றி நன்னெறிப் பட ஈட்டுதலே பொருள் என்ப. அப் பொருள் இவ்வுலக வாழ்க்கைக் கின்றியமையா நலன் பயப்பது. இஞ்ஞான்று யாண்டு நோக்கினும் பொருள் சேர்க்கும் விருப்பமே யாவற்றினும் மிகைபட நிற்பது. பொருளை முதலில் திரட்டிவிட வேண்டு மென்பர் பலர். அது புகழுடைய தாயினும் இல தாயினும் ஆகுக. தீய வழியானோ நல்லாற்றானோ எவ்வகையினும் பொருள்

சேர்த்தலே அன்னார் குறி யாகும். சாதாரண மனிதர் பொருளின் பிறகே புகழை நாடுகின்றனர். பொருளும் புகழும் அடைந்ததன் பிறகு கூடுமாயின் உண்மை காக்க உள்ளத்தில் நினைந்திடுவர். இஃது அறநெறி யன்று.

அறநெறிக்கண் செல்ல விழைவார் முதலில் உண்மையையும், பின்னர் புகழையும், அதன் பின்னரே பொருளையும் நாடுவர். தீநெறி விரும்புவார் முதலில் பொருளையும், இரண்டாவதாகப் புகழையும், கடைசியாக வாய்மையையும் நாடுவர்.

உண்மை நெறிக்கண் வாழ்க்கை நடாத்த விரும்பும் சான்றோரால் முறையே வாய்மையும் - புகழும் - பொருளும் நாடற்பாலன. எத்துறையினும் இம்முறையினையே சிந்தித்தல் வேண்டும். அறநெறி அறிவுறுத்து வார்க்கும், சமுக நலன் நாடும் கழகங்கட்கும் இத்தொடரொன்றே இன்றியமையாக் கருவியாகும். எச் செயலினும், எப்பொருளினும், யாவற்றினும் உண்மை காண விழைதல் வேண்டும். ஆராய்தல் வேண்டும். துணிவு பெறல் வேண்டும். பழமையென்றும் வழக்கமென்றும் ஆன்றோர் கொள்கையென்றும் எவற்றையும் விட்டுவிடுத லாகா. துருவித் துருவி ஆராய்ந்து உண்மை காண்டலே கல்வி அறிஞர் கடன். நமது முன்னோர் பழமையென்று எதனையும் ஆராய்ந்து கொள்ளவில்லை, ஆராய்வது புதுவ தன்று. இறைவனைக் காண்டற்கும் "நேதி, நேதி" இதுவன்று இதுவன்று என்று ஒவ்வொரு பொருளையும் ஆராய்ந்தே உண்மை கண்டனர். நாமும் உண்மை காண்டற்கே முயலுதல் வேண்டும். உண்மை கண்டே புகழ் பெறுதல் வேண்டும். உண்மையில் கண்ட புகழே இவ்வுலகில் என்றும் நிலைத்து இன்பம் பயக்கும் பொருளாம்.

தாய் நாட்டிற்கு உயர்வளித்தல்

(திருவாளர். த. ராமகிருஷ்ணன் அவர்கள் எழுதியது.)

அஹமஸ்மி ஸஹமாந உத்தரொ நாம பூம்யாம்
அபீஷாடஸ்மி விச்வாஷாடாசாமாசாம் விஷாஸஹி :

அதர்வ வேதம். xii, I, 54.

இவ் எமது தாய் நாட்டில் யாம் (ஸஹமாந:) பொறுமை யானும் (நாம) புகழானும் (உத்தர:) மிக உயர்வு பெற்று விளங்குகின்றேம். அவ்வாறே யாம் (அபிஷாட்) வெற்றி மிக (விச்வாஷடாட்) உலகனைத்தும் வெற்றிபெற்று (ஆசாம் ஆசாம்) ஒவ்வொரு திசையிலும் (விஷாஸஹி) பகைவரைப் புறமுதுகிடச் செய்வோமாக.

தாய் நாட்டில் யாம் உயர்வு பெற்று எவ்வகை வெற்றியும் அடைதற்குரிய சிறந்த ஆற்றல் படைத்திடுவோமாக. தாய் நாட்டுப் பற்றுடையாரெவரும் தங்கள் வெற்றி யாண்டும் பரவி, நாற்றிசைகளிலும் புகழ்பெறத் தக்க விழுமிய செயல்களாற்றி உயர்வு படைத்துத் தங்களைப் பயந்த தாய் நாட்டிற்கு உயர்வளித்தற் குரியராவர்.

இச் செய லுடையோர்க் கிஃ தில்லை.

வண்ணைநகர் ஸ்ரீ. க. வைத்தியலிங்கம்பிள்ளை எழுதியது.

இச்சையில் சந்நி யாசியே யாயினுந்
தூய மனதுடைத் துறவியே யாயினுஞ்
சகலரும் வணங்குஞ் சாமியே யாயினுஞ்
செந்தழன் மத்தியிற் சிந்தையை யடக்கி
மோனநற் றவஞ்செய் முனிவனே யாயினும்
மறக்கொலை யதனுன் வந்தமா மிசத்தை
உண்போன் றனக்கு உயர்கதி யில்லை!
ஏனம் பாலமு தின்சுவை யதனை
உண்டு மகிழா ததுபோ லுலகில்
அருங்கலை யனைத்து மையந் திரிபறக்
கற்றவ ருருமையைக் கவிஞர்க ளன்றிப்

இச் செய லுடையோர்க் கிஃ தில்லை

பேதைய ரறியும் பெற்றிதா னில்லை!
எண்ணுன் கெழிலு மியைந்த மடந்தையை
அந்தக வரனுக் கருகில்வைத் தாலும்
அன்புமீ தூர லவன்றனக் கில்லை!
பணத்தைக் கொடுபோய்ப் பைபை யாகக்
கொடுத்தெஞ் ஞான்றுங் குற்றேவல் செயினும்
வேசியர் தமக்கு விசுவாச மில்லை!
நவரச மமைந்த நலனுறு காவியப்
பொருள்களை நன்கு புந்தியா லுணர்ந்து
மொழிந்திடு மாற்றன் மூடருக் கில்லை!
மணவினை செய்த மணாளனை யிகழ்ந்து
தன்னிட்ட மாகத் தனியே போந்து
துட்டரோ டிணங்கித் தூர்த்தைக ளாகிய
நாரியர் தமக்கு நாணமே யில்லை.
என்றுங் குளிப்பு முழுக்கில் லாமல்
ஆடையுந் தோயா தழுக்குட னணியும்
அசுத்த முடையார்க் காசார மில்லை!
அகில மனைத்தும் படைத்தளித் தழிக்கும்
ஈச னொருவ ரிருக்கின் றாரென
நாஸ்திக னுக்கு நம்பிக்கை யில்லை!
குலமக டனக்குக் கொழுநனுக் கியற்றுந்
தொழும்பே யன்றி வேறுதொண் டில்லை!
இத்தரை மீதி லிருக்கும் போதினில்
நாம்புரிந் திட்ட நல்வினை தீவினை
இரண்டுமே யன்றி யிறந்ததன் பின்னர்
எம்மொடு வருவது வேறொன்று மில்லை!
தத்தம் வேலையைத் தாம்பார்ப்ப தன்றி
அந்நியர் பார்த்திடி லக்கறை யில்லை!
பொய்பே சாமை புறங்கூ றாமை
அழுக்கா றின்மை யிவைமுத லாகிய
சன்மார்க் கத்தி லொழுகா தவர்க்கு
பெரியோ ரவையின் மரியாதை யில்லை!
வாய்ஞா னங்கள் மற்றையோர் தமக்கு
ஈசனைக் கண்டவர் போலெடுத் துரைத்துத்
தான்பவ நெறிக டன்னின்வீழ்ந் துழலும்
மூர்க்கனை யொத்த முழுமக்க ளில்லை!
தனது கற்பு நெறியையுங் காத்து
கணவன் மானந் தன்னையுங் காத்து
ஒழுகுஞ் சற்குண வுத்தமி வைகும்
இல்லிலில் லாத பொருளொன்று மில்லை!

லக்ஷமி

கொண்டவன் றனக்குக் கூற்றுவன் போல
வந்துசந் தித்த வம்பிவாழ் வீட்டில்
எல்லாச் செல்வமும் பொருந்தி யிருப்பினும்
எரிபுகு மனைபோ லொன்றுமங் கில்லை!
சிந்தையன் போடு சிவநா மங்களை
இயம்பிடு வோர்க்கு எமபய மில்லை.
களவொடு சூது கட்குடி பொய்யிவை
உடையவர் பெருநிதி யுள்ளவ ராயினும்
மாநிலத் தவர்க்கு மரியாதை யில்லை!
முதலில் லாமல் முழுக்கடன் பட்டு
எத்தொழில் செய்யினும் லாபமே யில்லை!
ஈயா லோபிக டமக்கெஞ் ஞான்றும்
பூதலந் தன்னிற் புண்ணிய மில்லை!
எந்த முயற்சியு மியற்ரு திருந்து
மனையாள் சீதனப் பொருளால் வயிறு
வளர்ப்பவர் தமக்கு மதிப்பொன்று மில்லை!
தேகாப்பி யாசஞ் செய்யா திருக்குஞ்
சோம்பேறி கட்குச் சுகபல மில்லை!
திருட்டுத் தொழிலைச் செய்துசந் ததமும்
உழலுந் திருடர்க் குறவின ரில்லை!
அழுக்கா றின்மை பிறரிடத் தன்பு
சாந்த மொழுக்கந் தருமகைங் கரியம்
இக்குண முடையோர்க் கெதிரிக ளில்லை!
என்றும் விலங்குமீன் பட்சி யிவைகளைக்
கொன்றட் டுண்ணுங் கொலையாளி கட்கு
எக்கா லத்து மிரக்கமே யில்லை!
தரணியின் மீது தரித்திரர் தமக்கு
நண்புபூண் டொழுகும் ஞாதிய ரில்லை!
முற்றத் துறந்த மோனிக ளாகிய
ஞானிக டமக்கு நசையுறு பெண்பொன்
மண்ணென மொழிமூ வாசையு மில்லை!
சேயிழை மாரே தெய்வமென் றெண்ணிக்
கங்குலும் பகலு மவர்கா தலையே
நினைந்தலை வோர்க்கு நித்திரை யில்லை!
வெங்கிடா தமர்புரி வீரன் றனக்கு
எப்படை வரினு மச்சமே யில்லை!
பணத்தினை யீட்டப் பகலிர வின்றி
பலவூர் களினுங் காக்கைபோற் பறந்து
அனந்தலூ ணின்றி யரிப்பரிப் பாரென
அவாவொடு திரிவோர்க் காறுத லில்லை!

இச் செய லுடையோர்க் கிஃ தில்லை

கொழுநனைத் தெய்வ மாகவே கொண்டு
வழிபடு கின்ற மங்கையர் தங்கள்
கற்புக் கழிவு காணுவா ராயின்
ஆன்மா விழத்தற் கஞ்சுவ தில்லை!
எத்தனை நன்மதி யெடுத்துரைத் தாலும்
இழுதையின் செவியி லேறுவ தில்லை!
நவநிதி யொருங்கே நண்ணினு மான்றோர்
எப்போ தாயினு மிறுமாப்ப தில்லை!
குழந்தைக ளெத்தனை குழப்படி செயினும்
மாதா வுக்கு மனத்துய ரில்லை!
இவைமூத லெம்மா லியம்பிய வனைத்தும்
உண்மையா மெனநீர் ஓர்ந்திடு வீரே.

மதிப்புரை

மஹேந்த்ரஜாலம் :—“ருஷ்யா தேசத்தின் வனாந்தரப் பிரதேசங்களில் ஜனித்து, பால்யத்திலிருந்தே ஸ்திரீலோலனாயலைந்து பாதிரி வேடம் பூண்டு உயர்குலப் பெருமாட்டிகளையும் குற்றமற்ற இளங் கன்னிகைகளையும் கற்பழித்து, ருஷ்ய அரச குடும்பத்தையும் தனது மாயவலைக்குட்படுத்தி இராஜாங்கத்தில் உயர்பதவியடைந்து அந்நாட்டையே கறங்குபோல் ஆட்டி யலைத்த ரஸ்புட்டின் என்னும் பெரிய மாய ஜாலச் சண்டாளன் ஒருவனது ஜீவிய சரித்திரமாகும் இந்நூல். இதன் ஆசிரியர் தாருல் இஸ்லாம் பத்திராதிபர் ஸ்ரீமான் பா. தாவுத்ஷா சாஹிப் B. A. அவர். சாஹிபவர்கள் தமிழுலகத்துக்குப் புதிய ரல்லர். இஸ்லாம் மதச் சார்பாகவும் பொது விஷயமாகவும் பல நூல்கள் எழுதிப் பேரும் புகழும் பெற்ற சாஹிபவர்களின் இணையற்ற சொற்சுவையும் பொருணயமும் இந்நூலிலும் எங்கணும் மலிந்து விளங்குகின்றன. போலித் தேசாபிமானிகளும் பாஷாபிமானிகளும் மதாபிமானிகளும் மிகுந்த நமது நாட்டில் வாழும் மக்களுக்கு இந்நூல் நல்லறிவுச்சுடராய் விளங்குமென்பது திண்ணம். 190 பக்கமும் ரஸ்புடினின் உருவப்படமும் அமைந்த இவ்வழகிய நூலின் விலை அணா 12. தபாற்செலவு வேறு. வேண்டுவோர் தாருல் இஸ்லாம் புஸ்தகசாலை, தபாற் பெட்டி 15, சென்னை, என்ற விலாசத்துக்காவது நமது லக்ஷ்மி புஸ்தகசாலை தபால்பெட்டி 99 சென்னை என்ற விலாசத்துக்காவது எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ர கு மா ர ன்

அல்லது

ஜீவ நீர் கொண்டுவந்த இளவரசன்.

அத்தியாயம் 1.

பொன்மலைக் குள்ளன்.

பல நூற்றுண்டுகட்கு முன் ஜெவந்தி புரத்தை ஆண்டு வந்த ஜகந்நாத பூபதிக்கு குலபாலன், ஸ்ரீபாலன், ரகுமாரன் என்னும் திவ்ய திருநாமங்களை யுடைய மூன்று சத் புத்திரர்களிருந்தார்கள். ஜெகந்நாத பூபதிக்கு வயது மிகவும் அதிகமான படியினுல் வியாதி யாஞல் பீடிக்கப்பட்டவராய் படுத்த படுக்கையிலே கிடந் தார். நாளுக்கு நாள் வியாதியு மதிகமாகிச் சாகுந் தருவாயி லிருந்தார்.

மூன்று குமாரர்களும் தங்கள் தகப்பனுரைச் சீக்கிரம் இழந்து விடுவோமோ வென மிகவும் வருத்தப்பட்டார்கள். ஒரு நாள் அவர்கள் மூவரும் நந்தவனஞ் சென்று ஒரிடத்தி லுட்கார்ந்து கொண்டு அழுது கொண்டிருந்தார்கள். அப் பொழுது நரைத்த தாடியையும், பொக்கை வாயையு முடைய வயோதிக ரொருவர் அங்கு வந்து அவர்களது வருத்தத் திற்குக் காரணம் யாதென அவர்களிடம் வினவினுர். அதற்குக் குலபாலன், "ஐயா! மகாராஜாவாகிய எங்கள் தகப்பனுர் மிகவும் வியாதியாய் இருக்கிறுர். குணப் படுவார் போல் தோன்றவில்லை. அவர் பிழைக்கும் வழியை நாங்கள் அறியாததினுல் மிகவும் வருத்தப்பட்டுக் கொண் டிருக்கிறேம். பிழைக்கும் வழி உமக்குத் தெரியுமானுல் தயவு செய்து உரைத்தருள்வீ"ரென வேண்டிக் கொண் டான்.

வயோதிகர் :—ஓ ஹோ! எனக்கு அவ்வழி தெரியும். ஜீவாமிருதம் என்னும் நீரை நீங்கள் யாராவது கொண்டு வந்தால், அதை உங்கள் தகப்பனுர் குடித்தால் அவர் வியாதி குண மடையும். ஆனுல் அது எங்கிருக்கிறதென எனக்குத் தெரியாது.

ஸ்ரீபாலன் :—அது எங்கிருந்தாலுஞ் சரி, என துயிர் இக்காரியத்தைச் செய்வதினல் போனுலுஞ் சரி, இந்த ஜீவ நீரைக் கொண்டு வருவேன்.

பிறகு மூவரும் அரண்மனையை யடைந்து அரசனிடம் வயோதிகருக்கும் தங்களுக்கும் நடந்த விருத்தாந்தங்களை மொழிந்தார்கள்.

குலபாலன் :—தந்தையே! நான் சென்று அந்த ஜீவாம் ருதத்தைக் கொண்டு வருவேன், விடை யளியுங்கள். எவ் விதக் கஷ்டங்கள் நேர்ந்தபோதிலும் அவைகளை யெல்லாம் பொருட் படுத்தேன்! சீக்கிரம் விடை யளியுங்கள்.

ஜகந்நாத பூபதி :—முடியவே முடியாது. இது ஒரு லேசான காரியமல்ல. ஜீவாம்ருதத்தைக் கொண்டுவரப் போகும் உன்னுடைய மார்க்கத்தில் நேரிடும் அபாயங்களைச் சந்திப்பதற்குள் நான் என்னுடைய விதியைச் சந்தித்து விடுவேன். ஆதலால் என்னுடைய கடைசி நாட்களில் உன்னைவிட்டு பிரிந்திருக்கும் துர்ப்பாக்கியத்தை நான் அடையவே மாட்டேன்.

குலபாலன் :—அப்பா! எல்லாம் கற்றறிந்த நீங்களே இப்படிப் பேசினல் மற்றப்படி யார்தான் பேச மாட்டார்கள். அப்படியே நான் உமதுயிர் பிழைக்கும் வழியைக் கண்டறி வதில் எனதுயிரை விட்டால் ஜனங்கள் என்ன சொல்லு வார்கள்! என்னைப் புகழ்ந்து பேசுவார்க ளன்றோ! அது உமக்கும் உயர்ச்சியையும் சந்தோஷத்தையும் கொடுக்கு மல்லவா! இந்த அற்பக் காரியத்தையாவது நான் செய்யாமற் போனல் நான் பிறந்தென்ன பயன்! அல்லாமலும் நானிறந்து போனல் மற்றும் உமக்கிரண்டு புத்திரர்க ளில்லையோ! நான் பிறக்க வில்லையென்றே அப்பொழுது நினைத்துக்கொள்ளும்! அப்பா! நீர் எனக்கு விடை கொடுக்காவிடில் இன்று போஜன மருந்தேன்! இது சத்தியம்! சத்தியம்!

ஜகந்நாத பூபதி :—கண்ணே சுகமாய்ப் போய்வா.

"ஒருவேளை நமது தகப்பனர் இறந்து விட்டால், நான் இக்காரியத்தை உத்தேசித்து வந்திருப்பதால் இவ் விராஜ்யத்தை என் பெயருக்கே கொடுப்பார்" என்று நினைத்துக்கொண்டே பிரயாணப்பட லானுன். கொஞ்ச தூரம் வந்ததும் குலபாலன் நாற்புறங்களிலும் மலை களையும், பள்ளத்தாக்குகளையும், அடர்ந்த காடுகளையும்

கண்டு பயப்பட்டான். அப்படி பயத்துடன் பின் திரும்பிப் பார்க்கும்பொழுது கொஞ்ச தூரத்தில் குள்ள னொருவன் மலைப்பாறைகளின் ஒன்றின் மேல் நிற்பதைக் கண்டான்.

அக்குள்ளன் மிகுந்த வேடிக்கையான மனிதன். அவன் குட்டையான கால்களை யுடையவனும், பருத்த தலையை யுடையவனும், சப்பை மூக்கை யுடையவனும், குழிந்த நெஞ்சை யுடையவனு மிருந்தான். அவன் குலபாலனை நோக்கி, "இளவரசனைப்போல் காணப்படும் நீ எங்கே போய்க்கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான். அதற்கு, "சீ! முட்டாள்! உனக்கு என்னிடத்தில் என்ன வேலை! எட்டிப்போ! பாதையை விட்டு விலகிப்போ" என்று அகம்பாவமான குரலில் பதி லுரைத்தான். அதற்குக் குள் ளன் பதிலொன்று முரையாததினால், குலபாலன் தன்னு டைய பிரயாணத்தைத் தொடர்ந்தான்.

குலபாலன் தன்னை அவமரியாதையாகப் பேசினதில் குள்ளன் மிகவும் கோபங் கொண்டான். இளவரசன் இவ் வளவு கர்வத்துடனும் நாடோடியைப் போல் இருந்ததும் குள்ளனுக்குப் பிடிக்கவில்லை. அவனைத் தண்டிக்க வெண்ணி அவன்மேல் ஓர்வித மூலிகையைப் போட்டான். அது இளவரசனுக்குத் தெரியாது. குலபாலன் மிகவும் விரை வாய்ச் சென்றுகொண்டிருந்தபொழுது, பாறைகள் ஒன் றுக்கொன்று நெருங்கிக் கொண்டு வந்து, கடைசியில் ராஜ குமாரனாவது அல்லது அவனுடைய குதிரையாவது ஒரு அடி கூட மேலே எடுத்து வைக்க முடியாதபடி அவ்வளவு கிட்ட வந்து நெருங்கிக் கொண்டன.

இதைக் கண்டு குலபாலன் பின்னாற் போக வாரம்பித் தான். ஆனால் அவன் குதிரையைப் பின்னோக்கித் திரும்பும் பொழுது, ஓர் உரத்த சிரிப்பைக் கேட்டான். அவன் பின் னால் நோக்கியபோது பின்னாலும் பாறைகள் ஒன்றுக் கொன்று நெருங்கித் தான் பாறையினுள் அடைபட்டிருப்ப தைக் கண்டான். குதிரையை விட்டுக் கீழே இறங்கிக் காலால் நடந்துபோக வெண்ணினான். மறுபடியும் அவன் கேலியான உரைத்த சிரிப்பைக் கேட்டான். பிறகு கடைசி யாக முன்னும் பின்னும் போக முடியாமல் அப்பாறைகளின் நடுவே நிற்கும்படி நேர்ந்தது.

ஜீவாம்ருதத்தைக் கொண்டுவராமல் போனாலும் தனது குமாரன் க்ஷேமமாய்த் திரும்பி வருவானென்று ஜகந்நாத பூபதி நினைத்த எண்ணமெல்லாம் வீணாயிற்று.

இவ்வாறு சில நாட்கள் சென்றன. தனது தமயன் திரும்பி வாராததைக் கண்ணுற்ற ஸ்ரீபாலன், தனது தகப்பனாரை நோக்கித் "தந்தையே! எனது தமயனார் கட்டாயமாய் இறந்துபோயிருக்க வேண்டும். இல்லாவிடில் இதுவரையிலும் திரும்பாமவிரார். அந்த ஆச்சரியமான ஜலத்தைக் கொண்டு வர எனக்கு உத்தரவு கொடுங்கள்" என்று மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டான்.

ஜகந்நாதருக்கு அவனை அனுப்ப இஷ்டமில்லை. இருந்தபோதிலும் கடைசியாக ஸ்ரீபாலனுடைய வேண்டுகோளுக்கிணங்கி, ஜீவாம்ருதத்தைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டார்.

ஸ்ரீபாலனும், குலபாலன் சந்தித்த குள்ளனை அதே இடத்தில் சந்தித்தான். குள்ளன் அவனை நோக்கி, "ராஜ குமாரா! ராஜகுமாரா! இவ்வளவு அவசரமாக எங்கே செல்லுகிறாய்?" என்று கேட்டான். ஸ்ரீபாலன் "அடே! விகாரமான குள்ளா! என்னை நீ அறிய வேண்டுகிறாய். ஆனால் என் பெயரைச் சொல்ல மாட்டேன். உனக்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது" என்று கோபத்துடன் பதில் உரைத்தான். பிறகு அவன் கர்வம் மிகுந்தவனாய், தனது பிரயாணத்தை நடத்தினான்.

இதைக் கண்ட குள்ளன் அவனுக்குத் தெரியாமல், முன்போலவே, மூலிகையொன்றை அவன் முதுகிலெறிந்தான். குலபாலனைப் போலவே, ஸ்ரீபாலனும் பாறைகளின் நடுவே அகப்பட்டுக் கொண்டான்.

தனது இரண்டாவது தமயனும் திரும்பி வாராததையுணர்ந்த ரகுமாரன் தனது தந்தையிடம் தான் போய் ஜீவாம்ருதத்தைக் கொண்டு வருவதாகச் சொன்னான். அதற்கு ஜகந்நாதர் "முடியவே முடியாது! உன்னையும் விட்டால் பிறகு என்னை உலகம் பழிக்கும். உன்னுடைய அண்ணன்மார்கள் தீர்மானமாய் இறந்தே போயிருப்பார்கள். நீயும் போய்த் திரும்பி வாராமலிருந்து விட்டால், பிறகு என் கதி யென்னவாகும்? ஆனால் நீ போனால் கொண்டு வருவாய் என்ற நம்பிக்கையிருக்கிறது," என்றார்.

இருந்தாலும் ரகுமாரன் தனது தகப்பனுரைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டு, விடை பெற்றுத் தனது வழியை நோக்கினுன். வழியில் இவனும் குள்ளனைச் சந்தித்தான். சம்பாஷணை வருமாறு.

குள்ளன் :—அப்பா நீ யார்? எங்கே போகிருய்?

ரகுமாரன் :—அப்பா! என் பெயர் ரகுமாரன். என் தகப்பனுர் ஜகந்நாத பூபதி படுத்த படுக்கையிலேயே சாகுந் தருவாயி லிருக்கிறுர். அவரைக் குணப்படுத்த வேண்டுமென்கிற எண்ணத்தினுல் ஜீவாம்ருதத்தைக் கொண்டு வரப் போகிறேன். அந்த அமிருதத்தைக் குடித்தால் எனது தகப்பனுர் வியாதி தீருமென்று ஒரு பெரியவர் சொன்னுர். உன் பெயரையும் நீ எங்கே வசிக்கிரு யென்பதையும் தெரியப் படுத்துவாய். உன்னைப் பார்த்தால் மிகவும் பரிதாபமாயிருக்கிறதே.

குள்ளன் :—இதோ தெரியும் மலைகளெல்லாம் என்னுடைய வைகளே. இம் மலைகளுக்குப் பொன் மலை என்று பெயர். ஆகையால் என்னை பொன்மலைக் குள்ளன் என்றழைப்பார்கள். இதெல்லா மிருக்கட்டும். அந்த ஜீவாம்ருதம் இருக்கு மிடம் உனக்கு தெரியுமா?

ரகுமாரன் :—எனக்குத் தெரியாது. அது எங்கிருந்தாலும் நான் கொண்டு வந்தே தீருவேன்.

பொன்மலைக் குள்ளன் :—அப்படியா! நீ உனது தமயன்மார்களைப் போல் மிகுந்த கர்வத்துடனும் மமதையுடனும் செல்லாததினுல் உன் மேலிரக்கங் கொண்டு, அந்த ஜீவாம்ருதத்தை எங்கே யெப்படி கண்டு பிடிக்கக் கூடுமென்பதைச் சொல்லுகிறேன் கேள். இங்கிருந்து பல்லாயிரம் மைல்களுப்பால் தங்கமாளிகை யென்ருெரு அரண்மனையிருக்கிறது. அதைச் சுற்றி அநேகம் பூந்தோட்டங்கள் இருக்கின்றன. என்னுடைய உதவி யில்லாவிட்டால் இந்தத் தோட்டங்களிற் கூட உன்னுல் பிரவேசிக்க முடியாது. உனக்கு இந்த இரும்புக் கம்பியையும் மூன்று ரொட்டித் துண்டையும் கொடுக்கிறேன். அவைகள் மிகுந்த உபயோகமுள்ளவை களென நீ ஒரு காலத்தில் நினைக்கக் கூடும்.

(தொடரும்.)

"லக்ஷ்மி" பஞ்சாங்கம்

அக்ஷயஞு ஐப்பசி–கார்த்திகைமீ, சாலிவாகன 1849, கலியுகாதி 5028, பசலி 1336, கோல்லம் 1102, ஹிஜரா 1345, இங்கிலீஷ் 1926ஞு நவம்பர்மீ

நவம்பர்	ஐப்பசி கார்த்திகை	வாரம்	திதி	நக்ஷத்திரம்	யோகம்	விசேஷங்கள்
1	16	திங்	ஏகா 17-10	பூர 13-23	சித் 60	சர்வ மத்வ ஏகாதசி (துவா)
2	17	செ	துவா 23-0	உத் 20-28	அ20 சி28	மாதுளை செடி வைக்க
3	18	புத	திர 28-0	அஸ் 26-40	மர26 சி40	பிரதோஷம்
4	19	வி	சது 31-58	சித் 31-38	சி31 அ58	தீபாவளி பண்டிகை
5	20	வெ	● 34-52	சுவா 36.10	சித் 60	கரிநாள் அமாவாசை கேதார கௌரீ விரதம்
6	21	சனி	பிர 36-38	விசா 39.23	சித் 60	கார்த்திகை சுத்தம்
7	22	ஞா	துதி 37-30	அனு 41.43	மர 60	சந்திர தரிசினம் [மழை
8	23	திங்	திரி 37-27	கே 43-3	சித் 60	இராஜ விவகாரம் துவக்க
9	24	செ	சது 36-28	மூல 43-33	அ 43	நாகலசவுத்தி விரதம்
10	25	புத	பஞ் 34-40	பூரா 43-10	அ 60	கணிதாரம்பம் செய்ய கடன் தீர்க்க [விரதம்
11	26	வி	சஷ் 31-45	உத் 41-50	சித் 60	சூரசம்மாரம் கந்தர்சஷ்டி
12	27	வெ	சப் 28-5	திரு 39-38	மர 39	மரண யோகம்
13	28	சனி	அ 23-23	அவி 36-28	மர 36	வாகனமேற, மழை
14	29	ஞா	நவ 17-50	சத 32-35	சித் 60	வியாபார கணக்கு முடிக்க
15	30	திங்	தச 11-40	பூரட் 28-0	மர 28	மழை விரு, ரவி, ஏகாதசி
16	கார்த்திகை 1	செ	ஏகா 4-58 து 58-3	உத் 22-58	அமி 22	கரிநாள் ஏகாதசி துவாதசி
17	2	புத	திர 51-15	ரே 17-53	மர 60	பிரதோஷம் மழை
18	3	வி	சது 44-50	அஸ் 12-55	அமி12 சித்	வாகனம் வாங்க
19	4	வெ	○ 39-5	ப்ர * 8-28	சித் 60	கார்த்திகை அண்ணாமலை
20	5	சனி	பிர 34-40	* 5-8	அமி 60	விஷ்ணு தீபம் [யார் தீபம்
21	6	ஞா	துதி 31-40	ரோ 3-3	சித் 60	நவக்கிரசாந்தி செய்ய உப நயனம் [முடிக்க
22	7	திங்	திரி 30-23	மிரு 2-30	அ. சி	விவாகம் காதுகுத்த பூ
23	8	செ	சது 31-5	திரு 3-50	மர 3 சி	தனுராயனம் 1-45 [யுடுக்க
24	9	புத	பஞ் 33-30	புன 6-55	சித் 60	உபநயனம் சீமந்தம் கோடி
25	10	வி	சஷ் 37-48	பூச 11-40	அமி 11 சி	கரிநாள்
26	11	வெ	சப் 43-10	ஆயி 17-53	மர 60	மரணயோகம்
27	12	சனி	அ 49-20	மக 25-0	அ25சி	கிருஷ்ண அஷ்டமி
28	13	ஞா	நவ 55-35	பூர 32-23	சி32அ	படமெழுத [கட்ட
29	14	திங்	தச 60	உத் 39-38	சித் 60	களஞ்சியம் வைக்க இருப்பு
30	15	செ	தச 1-28	அஸ் 46-3	சித் 60	ராஜ தரிசினம் வாகனமேற

டிடக்டாஸ்-கோப் அல்லது துப்பு (இரகசியம்) அறியும் கருவி.

இருப்பிடத்தி லிருந்தே உம்முடைய காதலியையும் அதோடு அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்து கொள்ளாமலேயே



இதன் மூலமாய்ப் பார்க்கலாம். உம்முடைய பின்னும் முன்னும், உமக்குத் தெரியாமல் நடக்கிறதை ஏக காலத்தில் இரண்டையும் கண்டு கொள்ளலாம். கருவி விலை ரூ. 2. தபாற் கூலி அணு 6. F. M. S. ஆர்டர்கள் முன் பணம் ரூ. 3–8–0 அனுப்ப வேண்டும்.

துளசிராம் புக் டிபோ,
33, தையப்ப முதலி தெரு, ஜி. டி. ம்தராஸ்.

ஜோசியம்

1. குழந்தைகளுக்கு சகல தோஷம் நிவர்த்தி செய்து, ரட்சை கயிறு முதலியவை அனுப்ப ரூ. 2–8–0.
2. பொதுவாய பலன்களும் நட்சத்திர விஷயமாய் எழுதி அனுப்ப ரூ. 2–0–0.
3. ஜாதகத்துக்கு திசை, புக்தி, பலன்கள் எழுதி அனுப்ப ரூ. 5–0–0. V. P. மூலமாய் அனுப்ப சார்ஜு பிரத்தியேகம்.

வைத்திய ஜோசிய குப்புசாமி முதலியார்,
25, விநாயக மேஸ்திரி வீதி, ஜி. டி. சென்னை.

இனம்! ஜெண்டில்மேன் பாக்கெட் லீவர் கெடியாரம் இனம்!

18-காரட் கோல்டு பிளேட் கேஸ் பளபளப்பான தங்க கலர் டைல் ரிஸ்லெட்டு கெடியாரம் உறுதியான சாமான்களால் செய்தது. அழகிய சிறு சைஸ், சரியான மணி காட்டும். நெடுநாள் உழைக்கும். (எந்த ஷேப்பிலும் கிடைக்கும்.)

நெ. 153. மேல்படி கெடியாரம் 3 கெம்புக்கள் உள்ளது. சாதா வளையம் கில்ட் டைல். மேல்படி இனம் பாக்கெட் கெடியாரமுடன் விலை ரூபா 9–8–0. நெ. 154. சொக்க வெள்ளி கேஸ் ரிஸ்டு வாட்சு இனம் பாக்கெட் வாட்சுடன் விலை ரூபா 8–0–0. நெ. 155. 18 காரட் கோல்ட் ப்ளேட் கேஸ் பாக்கெட் லீவர் கடியாரம் ஒரு இனம் டேபில் டயம்பீஸுடன் விலை ரூபா 5–0–0. நெ. 156. ஷி கைக் கடியாரம் இனம் டயம்பீஸுடன் விலை ரூபா 6–0–0.

விலாசம்:— யூனிவர்சல் வாட்சு கம்பெனி
47/48, ராமகோடி பில்டிங்
ரட்டன்பஜார் ரோட், பார்க்டவுன், மதறாஸ்.

ஆங்கில ஆசான்

அல்லது ஆங்கில போதினி

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள்
சுலபமாய் தெரிந்து கொள்ளலாம்.

இது 8-ம் பதிப்பு 800-பக்கம் கொண்ட ஓர் பெரிய புத்தகம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும், மிகவும் முக்கியமானது.

முழு காலிகோ பயிண்டு புத்தகம் 1-க்கு விலை ரூ. **2.** தபால் செலவு அணா **6.**

பினாங்கு, சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன் பணம் அனுப்பினால் புஸ்தகம் ரிஜிஸ்டர் செய்து அனுப்பப்படும்.

தி. இராஜகோபால் முதலியார்,
நெ. 302, தங்கசாலைத் தெரு, மதராஸ்

பார்த்தவுடன் சந்தோஷத்தையும், கேட்டவுடன் ஆநந்தத்தையும், வாசித்தவுடன் மனோ உற்சாகத்தையும், முடித்தவுடன் வியப்பையும் கொடுக்கும் நாவல்கள் எவை?

அன்னவாசலின் அதிசயக் கொலை	விலை	ரூ. 1–4–0
நந்தவனத்தில் நடந்த இரகசியக் கொலை		ரூ. 1–0–0
தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி	விலை	ரூ. 1–0–0
ஸ்திரீ புருஷ ரகசியம் விலை		ரூ. 1–8–0

தபாற் செலவு வேறு.

பிர்மா அண்டு கம்பெனி,
203, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

இப்பூவுலக மெங்கனும் புகழ்பெற்றோங்கிய
நமது பி. ஸி. பழனி அண்டு கம்பெனியாரின்
ஸ்பெஷல் பட்டணம் பொடியையும்,
பி. ஸி. பரிமள நஸ்யத்தையும்
ஓர் முறை உபயோகியுங்கள்.

பி. ஸி. பழனி அண்டு கம்பெனியார்,
தபாற் பெட்டி நெ. 230, G. T. மதராஸ்.

போன், வெள்ளி மெடல்கள் பரிசுடன் புகழப்படும்
ரிஜிஸ்டர்டு & மெடிகேடெட்

கே. எஸ். சுகந்த மூக்குத் தூள்.

உபயோகிக்கத் தவற வேண்டாம்

ஒற்றைத் தலைநோய், பீனிசம், மண்டைக் குத்தல், ஜலதோஷம், இன்னும் கண்டத்திற்கு மேல் பட்ட அநேக ஜன்ம வியாதிகளை சொஸ்தப்படுத்தும்.

புட்டி 1-க்கு	ரூ.	**0—4—0**
டஜன் 1-க்கு		**2—4—0**
சேர் 1-க்கு		**1—8—0**

(V. P. சார்ஜ் வேறு)

K. S. சாகிபுவின் அசல் பட்டணம் பொடி.

வீசை 1-க்கு ரூ. **3—0—0**

(டின் & V. P. சார்ஜ் வேறு)

சொந்தக்காரர்

K. சுல்தான் முஹையதீன் சாயபு

தபாற்பெட்டி 260, நெ. 8 அப்பு மேஸ்திரி வீதி, சென்னை.

24 தங்க மெடல்கள் பரிசு பெற்ற

பட்டணம் பொடி.

காரம், மணம், குணம், நிறம், வாடை கமழுகிறது.

N. V. ஷண்முகம் & கோ.,
போஸ்ட் பாக்ஸ் 555,
வண்ணாரப்பேட்டை போஸ்டு, மதராஸ்.

முன் விலை ரூ. 1–8–0 இப்பொழுது விலை ரூ. 1–0–0

ஸ்திரீ புருஷ ரகசியம் (அல்லது) இன்பரச சாஸ்திரம்

ஸ்திரீ புருஷர்கள் கலியாண வாழ்க்கையில் தெரிந்துகொள்ள வேண்டிய ரகசியங்களும் இன்னும் சம்சார இன்ப சுகத்திற்கு வேண்டிய அநேக வழிகளும் அடங்கி யிருக்கின்றன.

சாம்பியன் வாட்ச் கம்பெனி,
சௌகார்பேட்டை போஸ்ட், மதராஸ்.

மேக வியாதி தொலைந்தது ! கவலைப் படாதீர்கள் !

சகல மேக ராஜாங்க

பைராகி எண்ணெய்

குணமில்லாவிடில் மருந்தின் கிரயம் திருப்பி அனுப்பப்படும்

மேகரோகம் இருபத்தொன்றில் தலை யாசனாவது வெள்ளை. முதலில் மேக ரோகத்திற்கு உற்பத்தி வெள்ளையே தான். அதாவது ஸ்திரீ புருஷர்கள் அதிக சம்போகத்தால் உஷ்ணங் கொண்டு இந்திரிய கமலம் நுட்பத்தினால் நொந்து ரணமாகி கீழ்ப் புண்ணாகிக் குண்டிக்காயைப் பற்றும். அதனால் மேக வெள்ளை உற்பவமாகி ஒரு வித தொத்துப் புண்ணைப் போலாகும். அந்தத் தூர் நீர் தேகத்தில் ஊறிப் பரவி மூத்திரக் குழியில் புண்ணாவதால் கொறுக்குப் புண் என்றும் கழுத்து நரம்புகளின் மீது புண்ணாவதால் கண்ட மாலை யென்றும், திரேகத்தில் தளும்பாகிக் காய் போல் வருவதால் கிரந்தி, நுணாக்காய்க் கிரந்தி யென்றும் அது வழியே புண் உண்டாகி குழி குழியாக விழுவதால் குழிப் புண் என்றும் உதிரத்தையும் நீரையும் பற்றி இனிப்பைத் தருவதால் மதுமேக மென்றும் வாய்வு சம்பந்தப்பட்டுக் கைகாலைப் பிடிப்பதால் மேக வாய்வென்றும் பெயருண்டாகும். இவைகளைக் கவனிக்காது விட்டு விட்டால் குஷ்டத்திற்குக் கொண்டுபோய் விட்டு விடும்.

இத்தகைய வியாதிகளில் ஏதேனும் ஒன்றினால் சிறிதேனும் கஷ்டப்படுபவர்கள் எங்கள் எண்ணெயைச் சாப்பிடுவார்களாகில் சொல்லியபடி மூன்றே நாட்களில் குண முண்டாகும். இதற்குக் கடினமான பத்தியங் கிடையாது. ஆனால் வியாதியஸ்தர்கள் 7-நாள் அல்லது 14-நாள் அவரவர் வியாதிக்குத் தக்கபடி சாப்பிடுவது நலம். 21-மேக ரோகங்களை சௌக்கியப்படுத்தி அநுபவ முறையாக எங்கள் எண்ணெய் உலகப் பிரசித்தி யடைந்திருக்கிறது.

7-நாள் எண்ணெய் ரு. **3** **14**-நாள் எண்ணெய் ரு. **5**

உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும்.

வி.பி. சட்ட மில்லாத வெளிநாட்டு நேயர்கள் தபாற் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்பவேண்டும்.

எல்லா விடங்களிலும் ஏஜெண்டுகள் தேவை.

ஸ்ரீ தனம் அன் கம்பெனி,

பிரம்ம ஸமாஜம், ஜி. டி. மதறாஸ்.

வீரிய விருத்திக்கு

மதன கோலாகல லேகியம்

இந்த சிறந்த பல விருத்தி லேஹியம் ஒரு பைராகி மஹானால் உபதேசித்து அருளியது. இது உள்ளூரிலும் பினாங்கு சிங்கப்பூர் முதலிய வெளியூர்களிலும் பிரசித்தி பெற்று அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் கொண்டிருக்கிறது. பால்யத்தில் ரோக ஸ்திரீகளினா லுண்டாகும் வியாதிகளை யும் இன்னும் உஷ்ணத்தினாலும் பலஹீனத்தினாலும் ஏற் படக்கூடிய சக்திக் குறைவையும் இந்த லேஹியம் நிவர்த்தி செய்வதோடு க்ஷயம், மேகம், சோகை, பாண்டு, ஞாபகக் குறைவு, சோம்பல், தலை வழுக்கை, தலை மயிர் உதிர்தல் மலடு முதலியவைகளை நீக்கி நீத்துப்போன நாதத்தையும் கெட்டிப்படுத்தும். ஒருமுறை பரீக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். முறையாகப் புடம்தீர்த்த அசல் வெள்ளி பஸ்பத்துடன்

1-சேர் டப்பி ரூ. 7—0—0 ½-சேர் டப்பி ரூ. 4—0—0

சு. அருணகிரி செட்டியார்.

223, ஈவினிங் பஜார், மூர்மார்க்கட், மதராஸ்.

இனாம்! சுந்தர்சிங் நாவல் இனாம்!!

22-காரட் ரோல்டுகோல்ட் கைக்கடியாரங்கள்.

அழகிய சிறு சைஸ்.

5-வருஷம் உத்தரவாதம்.

இந்தப் புது மாடல், பான்ஸி டயல் உள்ள அழகிய ரிஸ்ட்லெட் கடியாரங்களில் எந்த ஷேப் வாங்கினாலும் ஆர்டருடன் ஆரணி—குப்புசாமி முதலியார் எழுதிய 1-4-0 ரூபா விலையுள்ள சுந்தர்சிங் நாவலும் இனாமாகச் சேர்த்து அனுப்பப் படும். சுந்தர்சிங் வாசித்து விட்டவர்கள் அதேவிலையில் வேறு பிரியமான நாவல் எதுவோ அதைத் தெரிவித்தால் சுந்தர்சிங்குக்குப் பதிலாக அதை அனுப்புவோம்.

உடனே எழுதுங்கள். எங்கும் இல்லாத விலை

ரூபா **6-8-0** தான்.

தி பான்ஸி வாட்சு அவுஸ்,

15-A பீட், அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.

நல்ல சமயம்! கைவிடாதீர்கள்!!

கன்னியின் முத்தம்

4-பாகங்கள் விலை ரூ. 5—0—0

உலகம் கொண்டாடும் இந்த நாவலை இதுவரையிலும் படிக்காதவர்கள் இப்பொழுதாவது உடனே தருவித்துக் கொள்வார்களென்று எண்ணுகிறோம். ஏனென்றால் 30-11-26-க்குள் நமக்கு ஆர்டர் செய்கிறவர்களுக்கு தபால் சார்ஜு இனாம். இந்த லாபம் பிற இடங்களில் உங்களுக்குக் கிடைக்காது. உடனே எழுதுங்கள்.

வி. பி. சட்டம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் வெளி நாட்டு நேயர்கள் தபாற் செலவு இல்லாமல் முன் பணம் அனுப்பினால் போதுமானது.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.

மிகவும் உறுதியான



பாக்கெட் கடிகாரம்

இக் கெடிகாரம் மணியைச் சரியாகக் காட்டக்கூடியது. மிகவும் உறுதியானது. நீடித்து உழைக்கக்கூடியது. அநேகர் எழுதி வரவழைத்துள்ளார்கள். இரண்டு வாரத்தில் இக் கடிகாரம் இருநூறு உள்ளூரிலேயே செலவாகிவிட்டன. ஒவ்வொருவருக்கும் பாக்கெட் கடிகாரம் அவசியம் வேண்டும். ஆகையால் ஒரு கடிகாரத்துக்கு உடனே ஆர்டர் அனுப்புங்கள். விலை ரூபா 6 8 0

R. S. PAUL & Co.,
211, Jan Jani Khan Road,
Royapettah, MADRAS.

கேஸரியின்

லோத்ரா.

கர்ப்பாசய ரோக நிவாரிணி

இதன் உபயோகத்தால் குணம் கைக்கொண்ட பெண்மணிகள், இதை ஸ்திரீகளுக்கோர் வரப் பிரசாதினி என்றும் அதி சிரேஷ்டமான அவுஷத மென்றும், விலையில்லா ஆபரண மென்றும் சொல்லுகிறார்கள். ருதுசூலை, அகாலபஹிஷ்டி, ருது சிராவம் ஜாஸ்தி அல்லது குறைச்சலாய்ப் போவது, பஹிஷ்டை தடைபட்டுப் போவது, வெண் ரத்தப் போக்கு, கர்ப்பஸ்ராவம், அகாலப் பிரசவம், கருப்பை நழுகி விடுதல், கர்ப்பவிரணம், ருதுசூலையினால் வயிற்றில் உண்டாகும் கட்டி, மூர்ச்சை, சரீரம் பருத்தோ அல்லது மெலிந்தோ போவது, கணச்சூடு, சந்தான மில்லாமை, மலபத்தகம், இருமல், உப்பஸம், மேஹ ஜ்வரம் முதலிய சமஸ்த ரோகங்களும் இந்த லோத்ராவி னுபயோகத்தால் வெகு நம்பகமாய் நிவர்த்திக்கப் படும். இதன் விலை பெரிய புட்டி (12 அவுன்ஸ்) ரூ. 3-0-0

சிறிய புட்டி (6 அவுன்ஸ்) ரூ. 1-10-0

கேஸரி குடீரம், ஆயுர்வேத ஔஷதசாலை,

எழும்பூர், மதராஸ்.

A. **S.**

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள்.

ஒரு சிட்டிகை எடுத்து காலணா மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக இன்பமான சுகந்த வாசனையைத் தரும். கண்டத்துக்கு மேற்பட்ட 96 வியாதிகளைக் கண்டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்தக் கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் எ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 4 ஷி டஜன் 1-க்கு ரூ. 2-4 ஷி சேர் 1-க்கு ரூ. 3.

எம். ஜெ. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 3 ஷி டஜன் 1-க்கு ரூ. 2 ஷி சேர் 1-க்கு ரூ. 1-8.

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

எ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாயபு,

106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201, மதராஸ்

திரும்பவும்

புதிய ஸ்டாக்!

முந்திக் கொள்ளுங்கள்! முந்திக் கொள்ளுங்கள்!!

குஞ்சங் கட்டிய

வெள்ளை அமெரிக்கன் ஸில்க்

முன் எங்களிட மிருந்த 1500 பட்டுகளும் வெகு சீக்கிரத்தில் செலவாகி விடவே அநேக நண்பர்கள் தருவித்து உபயோகப் படுத்த முடியாது போயிற்று. திரும்பவும் புதிய ஸ்டாக் வந்திருப்பதால் முந்திக் கொள்ளுங்கள்! "கிடைக்க வில்லையே!" என்று வருந்த வேண்டாம்.

கைவசமே சுமார் 500-க்கு ஆர்டர்கள் இருப்பதால் உங்கள் ஆர்டர்களையும் அடுத்த மெயிலிலேயே அனுப்பி விடுங்கள்.

விலை ரூ. 6—8—0.

லக்ஷ்மிக்குப் புதிதாகச் சேருகிற சந்தா நேயர்களுக்கும் பழைய சந்தா நேயர்களுக்கும் பாக்கிங் தபால் செலவு இனாம்.

பழைய சந்தா நேயர்கள் ஆர்டர் செய்யும் போது சந்தா நெம்பர் குறிப்பிடவும்.

K. S. MUTHIAH & CO.,

EXPORT DEPARTMENT,

Post Box No. 99, MADRAS.

தீபாவளி! தீபாவளி!!

பணத்தைப்

போட்டாலும்,

பட்டுக்கே

போடுங்கள்!!

எப்பொழுதும்

நீங்கள் நூல் புடவைகளை வாங்குவதால் என்ன பயன்?

வருஷத்துக்கு ஒரு முறையாவது ஓர் பட்டுப் புடவை வாங்க வேண்டாமா?

இவ்வருஷத் தீபாவளிப் பண்டிகைக்கு, ஓர் கிளாவர்க் கரைப் பட்டுப் புடவைக்கு ஆர்டர் செய்யுங்கள்.

தீபாவளிக்கென்று புது மாதிரியான அநேக கலர்களில் தயார் செய்து ஸ்டாக் செய்திருக்கிறோம்.

No. 1.	16 மு × 44″	புடவை	38/–
	18 மு × 44″	,,	44/–
No. 2.	16 மு × 44″	புடவை	30/–
	18 மு × 44″	,,	36/–

CATALOGUE FREE

கே. எஸ். முத்தையா கம்பனி

பட்டு வியாபாரிகள்

சில்க் ஹவுஸ் - - ஸ்ரீ காசி.

N. S. S.

Printed by P. R. Rama Iyar & Co., Madras and Published by K. S. Sundarar.